விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 02 சனிக்கிழமை (14.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 057

பொதுசன நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்




# 6 ஆயிரம் பீரங்கிக் குண்டு வீச்சு
# 132 பொதுமக்கள் கோரப்பலி

## வியாழனன்று சம்பவம்

(கொழும்பு)

வன்னியில் தேவிபுரம் மற்றும் வள்ளிபுனம் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்று முன்தினம் வீழ்ந்து வெடித்த சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பீரங்கிக்குண்டுகளால் 132 பொதுமக்கள் பலியாகியுள்ளனர். 358 பேர் படுகாயமடைந்துள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவிலிருந்து வரும் மக்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வேண்டும்
## யாழ்.ஆயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்களை, யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றிரவு ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததாக யாழ்.ஆயரின் செயலாளர் வணபிதா. றொசான் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முல்லைத்தீவிலிருந்து இடம்பெயரும் மக்களை யாழ்ப்பாணத்துக்கும், முழங்காவில் மற்றும் அதற்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கமும் அரசும் இணைந்து செயற்பட இணக்கம்

(கொழும்பு)

உடனடித் தேவைகளின் போது தகவல்களைப் பரிமாறுவதற்கும், இணைந்து செயற்படுவதற்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், இலங்கை அரசாங்கமும் இணங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான தலைவர் பவுல் கஸ்ரிலுக்கும், வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

மோதல்கள் நடைபெற்றுவரும் பகுதியில் காணப்படும் நிலைமைகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு நகருக்குள் படையினர் நேற்று பிரவேசம்
## ஊடக மத்திய நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுவரும் படையினர் நேற்று அதிகாலை புதுக்குடியிருப்பு நகருக்குள் பிரவேசித்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இந்நிலையில் முல்லைத்தீவில் ஏனைய சில பகுதிகளினூடாகவும் முன்நகர்வினை மேற்கொண்டுவரும் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் ஊடக நிலையம் தெரிவித்தது.

இது தொடர்பில் (12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று சனிக்கிழமை வழமை போல் இடம்பெறும்.

ஏற்கனவே 09.02.2009 அன்று கப்பல் பிரயாணத்துக்கான பயணச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்களும் மாவட்டச் செயலகத்தில் 11 மற்றும் 13 ஆம் திகதி பிரயாணத்துக்கான அனுமதிச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்களும் முன்னுரிமை அடிப்படையில் பிரயாணம் செய்ய உள்ளவர்களும் இன்று இடம்பெறும் (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய விசேட பிரதிநிதியின் நியமனத்தை நிராகரித்தது அரசு

(சென்னை)

பிரித்தானியாவின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி நியமனத்தை அரசாங்கம் நிராகரித்துள்ளது. தமது தீர்மானத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தொடரும் மோதல்களை நிறுத்தி, இறுதிச் சமாதானத்தை எட்டுவதற்காக பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுண் இலங்கைக்கான விசேட பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் டெஸ் பிறவுணை நியமித்தார்.

இந்த விசேட பிரதிநிதி, இலங்கையிலுள்ள அனைத்து சமூகத்தலைவர்களுடனும் தொடர்புகளைப் பேணி சமாதானத்தை ஏற்படுத்துவார் என பிரித்தானியப் பிரதமர் கூறியிருந்தார்.

இந்த விடயம் குறித்து வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்தது.

எனினும் இந்த நியமனத்தை நிராகரித்த இலங்கை அரசாங்கம், இலங்கையின் உள்விவகாரத்தில் அவசியமற்ற தலையீட்டினை பிரித்தானியா அரசாங்கம் மேற்கொள்ள முயற்சிப்பதாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழரைக் காப்பாற்றக் கோரி
## ஐ.நா. சபைக்கு முன்னால் தமிழ் இளைஞன் தீக்குளிப்பு



(ஜெனீவா)

ஈழத்தமிழர்களைக் காப்பாற்றக் கோரி சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலில் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் தீக்குளித்து மரணமடைந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலின் முன்பாக திடீரென நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.15 தொடக்கம் 9.45 மணிவரையான நேரத்துக்குள் இளைஞர் தீக்குளித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)



வன்னியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அகோர ஷெல் தாக்குதலில் காயமடைந்தவர்கள் மாத்தளன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதனைப் படங்களில் காணலாம்.

# தமிழர் கொல்லப்படுவதைத் தடுக்காது இந்திய அரசு பொறுப்பின்றி செயற்படுகின்றது

## அத்வானி குற்றச்சாட்டு

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்தச் சிக்கலில் மத்திய அரசு அக்கறையின்றி செயற்படுவதாக இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் பதவிக்கான வேட்பாளர் அத்வானி குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரியும் இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவிகளை வழங்குவதை கண்டித்தும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் புதுடில்லியில் நாடாளுமன்றம் அருகே நேற்று வெள்ளிக்கிழமை உண்ணாநிலை போராட்டத்தை நடத்தியது.

புதுடில்லி ஜந்தர் மந்திர் பகுதியில் உள்ள நாடாளுமன்ற கட்டடம் அருகே காலை 8.00 மணிக்கு உண்ணாநிலை போராட்டம் தொடங்கியது.

அங்கு அத்வானி ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது; இலங்கையில் நடைபெற்றுவரும் போரில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். இலங்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகள் மீதும் குண்டு வீசித்தாக்கப்படுகின்றது.

உலக வரலாற்றில் மருத்துவமனைகள் தாக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இத்தகைய கொடுமையை நான் இதற்கு முன் கேள்விப்படவில்லை. இலங்கை வடக்குப் பகுதியில் தமிழர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தாக்கப்படுகின்றனர். இவை தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கு மட்டும் கவலையளிக்கும் விடயமல்ல. இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் கவலைப்படவேண்டிய விடயமாகும்.

இலங்கைத் தமிழர்களுக்காக இந்தியாவில் உள்ள அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். ஆனால் இதில் வருத்த மளிக்கக் கூடிய விடயம் என்ன வெனில், இந்தச் சிக்கலைத் தீர்க்கவேண்டிய மத்திய அரசு இந்த விடயத்தில் பொறுப்பின்றி செயற்படுகின்றது.

இலங்கை இனச்சிக்கலுக்கு போர் மூலம் தீர்வுகாணமுடியாது. அமைதிப் பேச்சுக்கள் மூலமாகவே தீர்வுகாண முடியும். எனவே இலங்கையில் போரை நிறுத்திவிட்டு அமைதிப் பேச்சுக்கள் தொடங்கப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் என்றார் அத்வானி. (ச-5)

## இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தியில் கடமையிலிருந்த இராணுவத்தினர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதாக, படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நயினாதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மகேந்திரம் நவநீதன் (வயது-23) என்ற இளைஞனே உயிரிழந்ததாக அவரது தந்தையாரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. (எ-7)

## திறந்த பல்கலைக் கழகத்துக்கு சமுகமளிக்க கோரிக்கை

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் எந்திரவியல் தொழில் நுட்பக் கற்கை நெறியினை தொடர்கின்ற அனைத்து மாணவர்களையும் நாளை ஞாயிறு காலை 9.30மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்திற்கு சமுகம் தருமாறு இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

# நாட்டை அழிக்கும் தலைமுறைக்கு இடமளிக்க முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

பயங்கரவாதமற்ற நாடொன்றை உருவாக்க வழிவகுத்துள்ள அதேவேளை தாய் நாட்டை பேரழிவுக்குள்ளாக்க நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் இளைய தலைமுறையொன்று மீண்டும் உருவாக இடமளிக்க முடியாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமுத்திரவியல் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் உரை நிகழ்த்தும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது; நாட்டைச் சீரழித்து மனிதப் படுகொலைகளில் ஈடுபடுத்தவென வடக்கு, கிழக்கு இளைஞர்கள் கரும்புலி படைகளுக்குச் சேர்க்கப்படுகின்ற நிலை மாற்றம் பெறவேண்டும். அத்தகைய இளைஞர்களை நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் பொறுப்புடையவர்களாக மாற்றியமைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

பயங்கரவாதமற்ற இலங்கையை உருவாக்குவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நம்மிடமிருந்து கை நழுவிய நாட்டின் மூன்று மடங்கு கடற் பிரதேசத்தை



மீண்டும் நாம் பெற முடிந்தமை பெரு வெற்றியாகும்.

மீன் பிடிப்பது மட்டும் கடற்றொழில் அல்ல. கடலில் பல்வேறு வளங்கள் உள்ளன. அதேவேளை கடல் பிரதேசம் சம்பந்தமாக உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறும் வகையில் சர்வதேசத்துடன் இணைந்ததான செயற்றிட்டங்கள் பற்றி சிந்திக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது.

வடக்கு கிழக்கு முழுவதிலுமுள்ள கடற் பிரதேசத்தின் உரிமைகள் நம் கையை விட்டு நழுவிப் போயிருந்தன. திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கூட நாம் சுதந்திரமாக போய்வரக்கூடிய சூழ்நிலை அற்றுப் போயிருந்தது. இன்று அந்நிலை மாற்றப்பட்டு சகல கடற் பிராந்தியமும் எமது உரிமைச் சொத்தாகியுள்ளன என்றார். . (ச-5)

# கம்பியில்லாத மற்றும் கைத் தொலைபேசியை பயன்படுத்துவோர் பதிவு செய்யவேண்டும்

## தவறினால் ஏப்.30இற்கு பின் சேவை துண்டிப்பு

கம்பியில்லாத மற்றும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவோர் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் முன் தமது முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் புகைப்படம் ஒன்றையும் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் தொலைபேசிச் சேவைகள் துண்டிக்கப்படவுள்ளன.

கம்பியில்லாத மற்றும் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் தகவல்களை திரட்டுவது தொடர்பாக ஜனாதிபதி புதிய விதிமுறைகளை பிறப்பித்துள்ளார். இலங்கைத் தொலைத் தொடர்புச் சட்டத்தின் 69ஆம் சரத்தின் பிரகாரம் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை சிரேஷ்ட சட்டத்தரணி சுமதி தர்மவர்த்தன மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

கம்பியில்லா மற்றும் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் தகவல்கள் திரட்டப்படுவது தொடர்பாக தொலைத் தொடர்பு ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விதிமுறைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய கம்பியற்ற மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தும் சகலரினதும் முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய தகவல்களுடன் புகைப்படம் ஒன்றையும் பெற்றுக் கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்படுள்ளது.

மேலும் குறிப்பிட்ட தொலைபேசிகளை பயன்படுத்தும் வேறு நபர்கள் இரு[illegible] அவற்றின் பெயர்கள். தேசிய [illegible] அட்டை இலக்கங்கள் ஆகியவ[illegible] பேசி சேவையை வழங்கும் நிறுவனத்திடம் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அரசின் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியால் பிறப்பிக்கப்[illegible] புதிய விதிமுறைகளுக்கு அமைய எதிர்வரும் எப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்[illegible] உரிய தகவல்களை வழங்கத் தவறும தொலைபேசி பாவனையாளர்களின் தொடர்பு துண்டிக்கப்படவுள்ளது. (ச-3)

# வேலைபெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

(யாழ்ப்பாணம்)

வேலை பெற்று தருவதாகக் கூறி 20ற்கும் மேற்பட்ட இளைஞர்களிடம் பணத்தினைப்பெற்று ஏமாற்றிய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தம்பிராசா சுகுணன் என்ற நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார். இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது

காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணி புரிபவர் என தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட பிரஸ்தாப நபர் அரசாங்க வேலை பெற்றுத்தருவதாகக் கூறி யாழ். வண்ணார் பண்ணை மற்றும் மீசாலை தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த இரு இளைஞர்களிடம் தலா 20 ஆயிரம் ரூபா பெற்றுள்ளார். பின்னர் அவ்விரு இளைஞர்களுக்கும் போலி நியமனக் கடிதத்தையும், பயிற்சி நெறிக்கான கடிதத்தையும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்ததுடன், தன்னை யாழ். கச்சேரிக்கு வந்து சந்திக்கு மாறும் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை நம்பி கச்சேரிக்கு சென்ற இரு இளைஞர்களும் ஏமாற்றம் அடைந்தனர். அங்கு குறிப்பிட்ட நபர் தொடர்பாக விசாரித்த போது அவ்வாறான ஒருவர் அங்கு இல்லை என்பது தெரியவந்தது.

ஏமாற்றம் அடைந்த இருவரும் பிரஸ்தாப நபருக்கு எதிராக யாழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்நிலையில், வேலை பெற்றுத் தருவதாகக் கூறிப் பணம் பெற்ற நபர் யாழ். நகருக்கு வந்து கொண்டிருக்கும் வழியில் யாழ் பொலிசாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆயர் செய்யப்பட்டார்.

அது தொடர்பான வழக்கு விசாரணையின் போது அவர், வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 20 இளைஞர்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபட்டமை தெரியவந்தது. இவ் வழக்கினை விசாரண செய்த மேலதிக நீதிவான் அ.ஆனந்தராஜா சந்தேக நபரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச-7)

# அவசர அம்புலன்ஸ் சேவைக்கு 300 ரூபா கட்டணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட அவசர அம்புலன்ஸ் சேவைக்கு ஒரு நோயாளியிடமிருந்து 300 ரூபா அறவிடப்படும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

எரிபொருள் செலவினை ஈடுசெய்வதற்காகவே இக்கட்டணம் அறவிடப்படுகிறது. எனினும் விபத்து, நலன்புரி நிலையங்களில் வதியும் மக்களுக்கு, வறிய நிலையில் வாழும் மக்களுக்கு மற்றும் நோயாளி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் போது இறத்தல் போன்ற சம்பவங்களின் போது அவசர அம்புலன்ஸ் சேவை இலவசமாக மேற்கொள்ளப்படும் என பிராந்திய பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அவசர நிலைகளின் போது நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான அவசர அம்புலன்ஸ் சேவை கடந்த 11ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

24 மணி நேரமும் செயற்படவுள்ள இச்சேவையைப் பெறுவதற்கு 110, 021 222 4444 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளமுடியும் . (ச)


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் வி.ஐங்கரனின் அம்மம்மா
திருமதி இராசமணி இராசையா
அவர்களின் (கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்) இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு கவலை அடைவதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2129)

- நண்பர்கள்

## கதிரை, மேசை தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள கதிரை, மேசை மற்றும் அலுமாரிகள் தேவை. வைத்திருப்பவர்கள்
விளம்பர இல.-105
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் தபால் மூலமாகவோ அல்லது 222-7829 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

# இன்று ஒரு தகவல்

## மனித மனம்

ஒரு கிராமத்தில் புத்தி சுவாதீனமில்லாத ஒரு பெண் இருந்தாள். அவள் நெடுங்காலமாகவே அந்தக் கிராமத்தில் தான் இருந்தாள். ஒருநாள் திடீரென அந்தக் கிராமத்து மக்களையெல்லாம் கண்டபடி திட்டிவிட்டுப் புறப்பட்டாள்.

"ஏன் இப்படி திடீரென இந்த ஊரை விட்டுப் புறப்படுகிறாய்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவள், "இவ்வளவு காலமும் என்னை நீங்கள் சித்திரவதை செய்தீர்கள். கொடுமைப்படுத்தினீர்கள். நான் இந்த ஊரை விட்டுப் போனால் தான் என்னுடைய அருமை உங்களுக்குப் புரியும். இனிமேல் தான் உங்களுக்குப் புத்திவரப் போகிறது. பாடம் கற்றுக் கொள்ளப் போகிறீர்கள். பார்த்துக் கொண்டே இருங்கள்" என்றாள்.

அவள் இப்படிப் பயமுறுத்தியது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

"நீ வந்து எங்களுக்குப் பாடம் கற்றுக்கொடுக்கப் போகிறாயா? எப்படிக் கற்றுக் கொடுக்கப் போகிறாய்?" என்று கேட்டார்கள்.

"நான் என்னுடைய சேவலை என்னுடன் எடுத்துக் கொண்டு போகப் போகிறேன். இவ்வளவு நாளும் என்னுடைய இந்த சேவல் கூவித்தானே பொழுது விடிந்தது. இனிமேல் உங்களுக்குப் பொழுது விடியப்போவதில்லை.

இனிமேல் உங்களுக்கு சூரியனும் உதிக்காது. இருட்டிலேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டாள். அவள் தன்னுடைய சேவலுடன் அடுத்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தாள். அவள் கொண்டு போன சேவல் கூவியது. பொழுது விடிந்தது. சூரியன் உதயமாகியது.

அவள் தனது மனதுக்குள், "அந்த முட்டாள் சனங்கள் இருட்டிலேயே கிடந்து துன்பப்படட்டும். இனிமேல் இந்த ஊர் மக்களுக்குத்தான் என்னுடைய சேவல் பழைய கிராம மக்களுக்கு இனிமேல் இருட்டுத்தான்" என்று நினைத்துக் கொண்டாள்.

இவள் இப்படி நினைத்துக் கொண்டது சரிதான். அங்கே சேவல் கூவியதும் உண்மை. பொழுது விடிந்ததும் உண்மை. சூரியன் உதித்ததும் உண்மை. இந்த ஊருக்கு வந்ததும் இங்கும் அப்படியே தான் நடந்தது. இதுவும் உண்மைதான். அவள் மனம் சேவல் கூவுவதற்கும் சூரியன் உதிப்பதற்கும் முடிச்சுப் போட்டது.

ஆனால் எந்தச் சேவலும் தான் கூவித்தான் சூரியன் உதிக்கிறது என்று நினைப்பதில்லை.

அது உதிக்கும் போது தான் இது கூவுது. இது சேவலுக்குத் தெரியும். சேவலை வைத்து இருப்பவர்களுக்குத்தான் அப்படிப் பட்ட எண்ணங்கள் உண்டாகிறது.

மனித மனத்தை வெளிப்படுத்தும், அடையாளம் காட்டும் இந்தக் கதையை ஓஷோ சொல்வது வழக்கம்.

எதிர்காலம் என்பது தானாக வரும். அது இப்பொழுது வந்து கொண்டுதான் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தவும் நம்மால் முடியாது.

'நாளைக்கு' என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் அந்த நாள் 'இன்றைக்கு' என்று மாறத்தான் போகிறது. அதை நம்மால் தடுக்க முடியாது.

மனிதன் தன்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும் அவ்வளவுதான். அந்தச் செயலுக்கு அப்பாலோ, பின்னாலோ, எதுவும் கிடையாது.

நாளையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை. அது வந்தே தீரும்.

எல்லாமே நம்முடைய ஆசைப்படியும் நம்முடைய எதிர்பார்ப்பின் படியும் தான். நடப்பதாக நாம் நம்புகிறோம். அந்தப் பெண் நினைத்தது மாதிரி!

மது மயக்கத்தில் இருப்பவர்களின் செயலுக்கும் இதற்கும் அதிக வித்தியாசமில்லை.

ஒருநாள் இரவு மதுக்கடையிலிருந்து ஒருவன் வெளியே வந்தான். தள்ளாடினான். நேராக ஒரு சுவரில் போய் முட்டிக் கொண்டு நின்றான். விடியும் வரை அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அந்த வழியாக வந்த ஒருவர், "பார்த்தாயா... மது அருந்தினால்... உன்னால் சொந்தக் காலில் நிற்க முடியவில்லை. கீழே விழுந்து விடுவாய். நீ கீழே விழாமல் தாங்கிக் கொள்ள ஒரு சுவர் தேவைப்படுகிறது பார்த்தாயா?" என்று புத்தி சொன்னார்.

அதற்கு அவர், "விவரம் தெரியாமல் பேசாதீங்க... இரவு முழுவதும் நான் தான் இந்த சுவர் கீழே விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். விட்டுவிட்டால் இப்பொழுது என்மீதே விழுந்து விடும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

2005 ஆம் ஆண்டில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்கள் இது வரையிலும் நிரந்தரமாக்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின், 2005 ஆம் ஆண்டில் பட்டதாரிகள் சுமார் 18 ஆயிரம் பேர்களுக்கு கல்வியமைச்சினால் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. அந் நியமனத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பட்டதாரி ஆசிரியரும் 3 வருடம் நன்னடத்தை காலமாக சேவையாற்ற வேண்டும்.

ஆனால் , 2008 ஆம் ஆண்டு இறுதிக் காலப் பகுதியில் பெரும்பாலான பட்டதாரி ஆசிரியர்களுக்கு நன்னடத்தைக் காலம் முடிவடைந்தபோதும், இதுவரையில் உரிய நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை இது தொடர்பாகக் கல்வித்திணைக்களம் மற்றும் கல்வி காரியாலயம் ஆகியவற்றிடம் முறையிடப்பட்ட போதும், எவ்வித சாதகமான பயனும் ஏற்படவில்லை. இதனால், இவ் 18 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களும் தமது நியமனம் தொடர்பாக அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

எனவே, தற்போது நன்னடத்தைக் காலம் நிறைவுற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உடனடியாக சேவைக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம். (ஓ-6)

# தாங்க முடியாத துன்பங்களில் இருந்து தமிழ் மக்களை காப்பாற்ற முன் வாருங்கள்

## பல்கலை. மாணவர்கள் ஒன்றியம் வேண்டுகோள்

வன்னி மக்களது பாதுகாப்பிற்கான வலியுறுத்தல் பிரார்த்தனை நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தில் இம்மாதம் 9 ஆம் திகதியிலிருந்து இடம் பெற்று வருகிறது. போர் நெருக்கடிகளால் எல்லா வகையிலும் பாதிப்படைந்துள்ள எமது மாணவர்களது உளநிலைக்கான அமைதிக்கும் எமது மக்களின் பாதுகாப்பான வாழ்வுக்கான வலியுறுத்தலாகவும் '*'மௌனப் பிரார்த்தனையும் உபவாசமும்*' என்ற இந்த நிகழ்வை யாழ். பல்கலைக்கழக சமூகம் நடத்தி வருகிறது.

ஈழத்தில் என்றுமில்லாதவாறு மக்களது சாவுகளும் துன்பங்களும் அதிகரித்துள்ளன. உணவு, உடை, தஞ்சமடைவதற்கான இடம் என்பவற்றுக்காக அப்பாவி வன்னி மக்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளுகிறார்கள். தாங்க முடியாத, அனுபவிக்க முடியாத இந்தத் துன்பங்களிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றும்படி அனைவரையும் அவசரமாக வேண்டி நிற்கின்றனர். வகைதொகையற்ற அழிவுகளையும் கசப்புக்களையும் தருகின்ற போரை நிறுத்துவதன் மூலம் எமது மக்களை அழிவிலிருந்து காப்பாற்ற மனிதநேய அடிப்படையில் முன்வரும்படி அனைவரையும் வேண்டுகின்றனர்.

இன்றைய மிகவும் துன்பகரமான சூழ்நிலையில் அமைதியான வழியில் தீர்வு காண்பதற்கும் மக்களை அழிவிலிருந்து காப்பதற்கும் பின்வரும் கோரிக்கைகளை யாழ். பல்கலைக் கழகம் வலியுறுத்துகின்றது.

மக்களின் உயிர்ப்பலியை உடனடியாக தடுப்பதுடன், இடம் பெயரச் செய்தல் போன்ற நெருக்கடிகளைத் தவிர்க்க வேண்டும். இடம் பெயர்ந்து அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களிலுள்ள முகாங்களில் தங்கியிருக்கும் வன்னி மக்களை மனிதாபிமான முறையில் நடத்த வேண்டும்.

போர் நடவடிக்கையில் இருந்து விடுபட்டு சமாதானத்திற்குச் சென்று அமைதியை உருவாக்க வேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றுக்குள்ளான தீர்வை வழங்க வேண்டும். ஈழத்தில் சமாதானத்தை ஏற்ப டுத்த சர்வதேச சமூகம் உடனடியாக வலியுறுத்த வேண்டும்.

தமிழ் மக்களது மரணங்களும், அவர்கள் அனுபவிக்கின்ற துன்பங்களையும் தவிர்த்து, அமைதியை ஏற்படுத்தும்படி மிகவும் அவசரமான வலியுறுத்தலாகவும் மாணவர்களின் ஆத்ம அமைதிக்காகவும் இந்த *பிரார்த்தனையும் உபவாசமும்* நாள்தோறும் நடைபெறுகின்றது என்றும் தெரிவித்துள்ளனர். (ஓ)

## இராசி பலன்

*14.02.2009*
*(மாசி 2, சனிக்கிழமை)*
*பஞ்சமி பிற்பகல் 4.33 வரை*
*சித்திரை பின்னிரவு 1.28 வரை*
*இராகுகாலம் 9.33-11.03 வரை*
*சுபநேரம் 3.33-5.03 வரை*

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, பிரயாண நன்மை. |
| இடபம் | நோய் குணமடைதல், காரிய சித்தி, மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம். |
| மிதுனம் | அஜீரணக் கோளாறு, தாழ்ந்த சுபாவம், பணவிரயம், முயற்சி தாமதம். |
| கடகம் | மனச் சஞ்சலம், கல்வியில் ஆர்வம், உறவினர் சந்திப்பு, சுப செலவு. |
| சிங்கம் | மனோதைரியம், பெருமையடைதல், சகோதரர் உதவி, வாக்கு மேன்மை. |
| கன்னி | எடுத்த காரியம் தாமதமாகும், கௌரவக்குறைவு, பணவிரயம், மனச் சோர்வு. |
| துலாம் | வெகுமானம், நண்பர்கள் உதவி, சயனசுகம், நல்ல முயற்சி. |
| விருச்சிகம் | உணர்ச்சி வசப்படல், காரிய அலைச்சல், சயன சுகக்குறைவு, பிறருக்கு உதவுதல். |
| தனுசு | தொழில் நன்மை, குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| மகரம் | சுபநிகழ்வு, நல்ல தகவல், அதிக பிரயாசை, விருந்துபசாரம். |
| கும்பம் | புதிய திட்டமிடல், ஆரோக்கியக் குறைவு, நிர்ப்பந்த நிலை, பிரயாணம். |
| மீனம் | எதிர்பாராத அச்சம், காரிய தாமதம், கௌரவக்குறைவு, போசன சுகம். |

வளவன்

## பிரித்தானியாவில் இலங்கையர் உட்பட மூவர் கைது

இலங்கையர் உள்ளிட்ட மூன்று சட்டவிரோத குடியேற்றக்காரர்களை பிரித்தானிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட இருவரும், ஒரு சட்டவிரோதக் குடியேற்றக்காரரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட ஓர் இலங்கையரையும், உக்ரேனிய பெண் ஒருவரையும் அவர்கள் தொழில் செய்த இடத்தில் வைத்து பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இலங்கையர் குறித்த மேலதிக தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை. (ஓ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 220 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 200 |
| தக்காளி | 100 | 130 |
| அவரை | 40 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 |
| கோவா | 40 | 60 |
| கரட் | 40 | 70 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 40 | 40 |
| வாழைக்காய் | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 25 | 40 |
| பெரிய வெங்காயம் | 60 | 70-100 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 |
| கரணைக் கிழங்கு | 25 | 30 |
| பயிற்றங்காய் | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 |
| போஞ்சி | 25 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 10 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 |

# முறைசாராக் கல்விப் பிரிவில் 16 பயிற்சி நெறிகள் ஆரம்பம்

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் வடமராட்சி கல்வி வலயத்தில் இம்முறை 16 பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

கணனி, மின்சார, இலத்திரனியல், கணனி திருத்தம்,தொலைக்காட்சிப் பெட்டி திருத்தம், படகு இயந்திரத் திருத்தம்,வீட்டு மின் இணைப்பு, உடையமைத்தல், துணி அச்சிடல், தலையலங்காரக் கலை, மனை முகாமைத்துவம், பனம்பொருள் கைப்பணி, அலுமினியம் பொருத்துதல், மரத்தளபாட வடிவமைப்பு, மோட்டார் சைக்கிள் திருத்தம், துவிச்சக்கரவண்டி திருத்தம், மோட்டார் லொறி திருத்தம் ஆகிய பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிகளை மேற்கொள்ள விரும்பும் குழுக்களிடமிருந்து பாடசாலைகள் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இப் பயிற்சி நெறிகள், கிடைக்கப்பெறும் பயிற்சியாளர்களின் தொகை, நிலையத்தின் கருவி, உபகரண வசதி, தகைமையுள்ள போதனாசிரியர் வசதி என்பவற்றைக் கருத்திற் கொண்டு பயற்சி நிலையங்கள் தீர்மானிக்கப்படும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை,இப் பயிற்சி நெறிகளைப் போதிக்க பொருத்தமான போதனாசிரியராகக் கடமையாற்றுவதற்கு தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வடமராட்சி கல்வி வலயம் ஏற்கனவே கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## இளைஞர் விருது வழங்கல் போட்டிகள்

(கோண்டாவில்)

யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் இளைஞர் விருது வழங்கல் போட்டிகள் இவ் வருடம் நடாத்தப்படவுள்ளன.

இதில் சிறுகதை நாவல், கதை,கட்டுரை, பாடல், சங்கீதம், சித்திரம், சிற்பம், புகைப்படம்,நாடகம், நடிப்பு,நடனம், நாட்டியம், கீழைத்தேய மேலைத்தேய வாத்தியம் இசைத்தல் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இதில் நாடகப் போட்டிகள் குறுநாடகம், நாடகம் என இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

இப் போட்டியில் 15-19 வயதிற்கிடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 28 ஆம்திகதி வரை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என உதவி இயக்குநர் தி.சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஓ-36)

## புண்ணிய நாச்சி அம்மையார் தினம்

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையால் நடத்தப்படும் புண்ணிய நாச்சியம்மையார் தினம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலன சபை தலைவர் த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். அஞ்சல் திணைக்கள பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் க. புஸ்பநாதன், கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து திருமுறை ஓதல், பண்ணிசை, பேச்சு, அத்துடன் 'சமய வளர்ச்சியில் பெண்கள்' எனும் தலைப்பில் திருமதி அருள் நங்கை சண்முகநாதனின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனம் தொடர்பான 23.11.2007 திகதிய வர்த்தமானி பிரசுரத்தின் பிரகாரம் பருத்தித்துறை, நல்லூர், சாவகச்சேரி, சண்டிலிப்பாய்,நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலக/உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வெற்றிடம் குறிப்பிடப்பட்ட திடீர் மரண விசாரணை பிரிவுகளை நிரப்புவதற்கும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலக /உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தற்போது வெற்றிடமாகவுள்ள திடீர் மரண விசாரணை பிரிவுகளை நிரப்புவதற்கும் பொருத்தமான விண்ணப்பதாரர்கள் தங்களது பிரிவு பிரதேச செயலர் / உதவி அரசாங்க அதிபர் உடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாமென யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (ஓ)

## பாதிக்கப்பட்டோருக்கு பொருட்கள் வழங்கப்பட்டது

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க காரைநகர் பிரிவுக் கிளையினரால் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிஷா புயல் வெள்ள அனர்த்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு உணவில்லாப் பொருட்கள் பிரிவு அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபரின் சிபார்சின் அடிப்படையிலேயே இப் பொருட்கள் வழங்கப்பட்டதாக பிரிவின் தலைவர் சோ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ-134)

## பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2009 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நெறிகளுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

6 மாத கால பயிற்சித் திட்டத்தில் கணனி, ஆங்கில மொழி பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படவுள்ளதாகவும், விண்ணப்பதாரிகள், எழுத்துப் பரீட்சை மூலமாக இணைத்துக்கொள்ளப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 18-29 வயதிற்கு இடைப்பட்டவர்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட நான்கு பாடங்களில் சித்தியடைந்த இருபாலாரும விண்ணப்பிக்கலாம்.

மேலும் பதிவுகளை இம்மாதம் 16,17ஆம் திகதிகளில் யாழ்.தேசிய இளைஞர் மன்ற காரியாலயத்திலோ அல்லது பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தரிடமோ மேற்கொள்ள முடியும் என மன்ற உதவி இயக்குநர் தி.சிவதட்சணாமூர்த்தி கேட்டுள்ளார். (ஓ-36)

## பாடசாலை மாணவர்களுக்கு அஞ்சல் அடையாள அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தால் பாடசாலை மாணவர்களுக்கு தபால் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முதன் முறையாக மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சென்ற்.ஆன்ஸ் வித்தியாலயம், நவாலி மகா வித்தியாலயம், சுதுமலை வடக்கு அ.த.தமிழ்க்கலவன் பாடசாலை, சுதுமலை அமெரிக்க மிஷன், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தரம் 8 முதல் 11 வரை கல்வி கற்கும் மாணவர்கள் தமது செயற்பாடுகளை சிரமமில்லாது மேற்கொள்ளும் முகமாக இவ் அடையாள அட்டை வழங்கப்பட்டதாக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ)

## மூத்த பிரஜைகள் பேரவை காரியாலயத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் காரியாலயம் மார்ச் மாதம் 10ஆம் திகதி வைபவ ரீதியாக யாழ்.அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தில் பேரவையின் வருங்கால செயற் திட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் நடைமுறைச் சாத்தியமான ஆலோசனைகளை எழுத்துமூலம் இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி யாழ். மாவட்டத்தில் வசிக்கும் அனைத்து மூத்த பிரஜைகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

பெறப்படும் ஆலோசனைகளை கருத்திற் கொண்டும் பேரவையின் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பேரவை செயலாளர் லயன் பரமசிவம் தெரிவித்துள்ளார். ஆலோசனைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை, 95, K.K.S.வீதி, கொக்குவில், மே/பா எரிக்கணேஸ் கண்ணாடி விற்பனை நிலையம்,கொக்குவில். (ஓ)


### தீவக லயன்ஸ் கழகத்தினால்

## நெடுந்தீவு மக்களுக்கான சேவைத்திட்ட முகாம்

அமரர் R.V.S.திருநாவுக்கரசு ஆசிரியர் ஞாபகார்த்தமாக கனடா மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் சு.விவேகானந்தனின் அனுசரணையுடன் தீவக லயன்ஸ் கழகம் நடத்தும் நெடுந்தீவு மக்களிற்கான மாபெரும் சேவைத் திட்ட முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் 3.30 மணி வரை நெடுந்தீவு மத்தி, தென்னிந்திய திருச்சபை பகற் பராமரிப்பு நிலையம் மற்றும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய இடங்களில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகளினால் நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பொது மருத்துவப் பரிசோதனை மற்றும் மருந்து வழங்கலும், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான பரிசோதனை,ஆலோசனையுடன் மருந்து வழங்கலும்,அத்துடன் சலரோகம் தொடர்பான விழிப்புணர்வும் இரத்தப் பரிசோதனையும்,ஆலோசனைகளும், மருந்து வழங்கலும் நடைபெறவுள்ளது.

மேலும் கண் நோயாளர்களுக்கு பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கலும் மாணவர்களுக்கிடையே பற்கள் பரிசோதனையும், விழிப்புணர்வு வழங்கலும் இடம்பெறும். அத்துடன் பழமர நடுகையும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)




## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகிழக்கு பிரதேசசபை செயலாளர் த.நடராசா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை படவரைஞர் எஸ்.எக்ஸ்.குலநாயகம், கோப்பாய் லயன்ஸ் கழக தலைவர் அ.சற்குணநாதன், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர்களான இராசதுரை, ச. தவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4-25)

(அல்வாய்)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வை ஒன்றியத் தலைவர் மு.தங்கவேல் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பரிசில்களை திருமதி ச.தங்கவேல் வழங்கிக் கௌரவிப்பார். (6-19)










வடமாகாண புற்றுநோய்- எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தினால் போசாக்குக் குறைவான வறிய புற்றுநோயாளர்களுக்கு சத்து நிறைந்த பால்மா பேகைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சங்கத்தின் உபதலைவர் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் தலைமையுரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்பு லயன்ஸ் கழக ஆளுநர் லயன் ராஜபக்ஷ நோயாளியொருவருக்கு பால்மா ரின் அன்பளிப்புச் செய்வதையும், அத்துடன் சங்கச் செயற்பாட்டிற்காக 2 இலட்சம் ரூபாவுக்குரிய காசோலையை உபதலைவர், பொருளாளர் ஆகியோரிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 70

### ஆதிவரலாற்றுக் காலம்

**பொ.ஆ.மு.250 – பொ.ஆ.300**

இக்காலப் பகுதியில் அனுராதபுரத்து ஆட்சியாளர் குடும்பத்தினர் தமிழ்நாட்டு அரசுகளின் ஆட்சியாளர் குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டிருந்தனர் என்று அறிவதற்கும் சான்றுகள் கிடைக்கின்றன.

தமிழ் நாட்டு அரச குடும்பத்தினரும் அனுராதபுரத்துக்கு வந்தது போல, அனுராத புரத்து அரச தமிழ்நாட்டு அரசுகளுக்கு சென்று வந்தனர். சோழ அரசிலிருந்து எல்லாளன் வந்து அனுராதபுரத்தில் ஆதிக்கம் பெறுவதற்குப் பின்னணியாக இத்தகைய தொடர்புகள் இருந்தன என்று கொள்ள இடமுண்டு. அவனுக்குப் பின் பாண்டியர் குடும்பத்தைச் சேர்ந்தோர் வந்திருக்க முடியும் என்பதும் முன்னர் குறிப்பிடப்பட்டது. அவர்களுக்குப் பின், முதலாம் நூற்றாண்டில் இளநாகன் என்று கொள்ள இடமுண்டு. அவனுக்குப் பின் பாண்டியர் குடும்பத்தைச் சேர்ந்தோர் வந்திருக்க முடியும் என்பதும் முன்னர் குறிப்பிடப்பட்டது.

அவர்களுக்குபின், முதலாம் நூற்றாண்டில் இளநாகன் என்ற அனுராத புரத்து அரச குடும்பத்தவன் தமிழ்நாட்டுக்குத் தன் குடும்பத்துடன் சென்று சில காலம் தங்கியிருந்தபின், அங்கிருந்த படைகொண்டு வந்து அனுராதபுரத்து அரசைக் கைபற்றினான். அவனுடைய மகன் சந்தமுக (சந்திரவதன) சிவ என்பான் ஒரு தமிழ்ப் பெண்ணை (தமிழதேவி) மணம் முடித்திருந்தான். இப் பெண் தமிழ்நாட்டு அரச குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவளாக இருந்திருப்பாள் என்று தோன்றுகிறது. ஆகவே ஆதி வரலாற்றுக் காலத்திலும் தென்னிந்தியா– இலங்கைப் பிராந்தியத்தில் இனக்குழு வேறுபாடுகளைக் கடந்த அரசியல் தொடர்புகள் காணப்பட்டன. இச் சூழ் நிலையில் அனுராதபுரத்தில் உயர் குழாத்தைச் சேர்ந்த தமிழர் அடிக்கடி ஆதிக்கம் பெறுவதைக் காணமுடிகின்றது.

### அனுராதபுரத்துக்கு அப்பால்

பாளி வரலாற்றேடுகளில் அனுராதபுரத்தில் ஆண்ட தமிழ் மன்னர்கள் பற்றிய தகவல்கள் சேர்க்கப்பட்ட போதிலும், அனுராத புரத்துக்கு அப்பால் இருந்த அரசுகளில் ஆட்சிபுரிந்த தமிழர் பற்றியோ பிற தமிழர் பற்றியோ இந் நூல்களில் தகவல்கள் இல்லை. எல்லாள மன்னன் காலத்தில் அனுராதபுரத்திற்கு அப்பால் பல தமிழ்க் குறு நில மன்னர் ஆட்சி நடத்தியமை பற்றி மஹாவங்ஸ நூலின் துட்டகாமணீ காவியத்தில் கூறப்பட்டுள்ளது.

துட்டகாமணீ மன்னன் போர்களை வர்ணிக்கும் இடத்தில் அம் மன்னன் தனது குறுநில அரசு இருந்த தெற்கு இலங்கையிலிருந்து அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்துச் சென்றபோது, எல்லாளனுடன் போராடுமுன் தமிழ் மன்னர்களை வெற்றி கொண்டான் என மஹாவங்ஸ கூறுகின்றது. இதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அனுராதபுர அரசுக்கு வெளியே காணப்பட்ட பல குறுநில அரசுகளுள் தமிழ் ஆட்சியாளர்களையுடைய குறுநில அரசுகளும் இருந்தன என்பதை ஏற்றுக்கொள்ள முடியும். இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்கள் பல குறுநில அரசுகள் இருந்தமைக்குச் சான்று பகரும். இக் கல்வெட்டுக்களிலே 28 இடங்களில் குறுநிலத் தலைவர்களுடைய தானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பேராசிரியர் குண வர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். இவை பெரும் பாலும் வடக்கு,தென்கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் காணப்படுகின்றன.

### வவுனியா மாவட்டம்

மிகவும் வடக்கே கிடைத்துள்ள கல்வெட்டு வவுனியா மாவட்டத்திலுள்ள பெரிய புளியங்குளத்தில் உள்ளது. இதற்கு கிழக்கே (வடகிழக்கில்) நாச்சியார் மலையில் இன்னொரு கல்வெட்டு உள்ளது. இவற்றுக்கு வடக்கே கல்வெட்டுக்கள் கிடைக்காமைக்கு உகந்த பாறைகளும் குகை களும் இல்லாமையே காரணம். வவுனியா மாவட்டத்திலும் முறையான தொல்லியல் ஆய்வு இன்னும் நடைபெறவில்லை. மேலும் பல கல்வெட்டுக்கள் இம் மாவட்டத்தில் எதிர்காலத்தில் வெளிப்படும் என்பதில் ஐய மில்லை.

### யாழ்ப்பாண மாவட்டம்

வவுனியா மாவட்டத்துக்கு வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில் குறுநில அரசு ஒன்று இருந்ததைப் பாளி நூலாகிய ஸம்மோஹ விநோதனீ என்ற நூலில் வரும் ஒரு கதை மூலம் அறியலாம்.


இக் கதை நாகதீப எனப் பாளியில் வழங்கும் நாகதீவில் (யாழ்ப் பாணத் தீப கற்பம்) தீபராஜ (பின்னர் தமிழில் தீபத்தரையன்) என்ற விருதைப் பெற்ற ஒரு ஆட்சியாளன் பற்றிக் கூறுகின்றது.

தீபராஜ என்ற பெயரைப் பெற்ற ஓர் ஆட்சியாளன் மிஹிந்தலையிலுள்ள ஒரு பிராமிக் கல்வெட்டிலும் குறிப்பிடப்படுகின்றான். நாகதீவு ஒரு குறுநில அரசாக இருந்திருக்க வேண்டும் என்பதை மஹாவங்ஸத்திலே வரும் சில புனைகதைகளாலும் மணி மேகலையில் வரும் கதைகளாலும் அறியலாம்.


இந்த இலக்கியச் சான்றுகளை விட, இலங்கையின் பிராமிக் குகைக் கல்வெட்டுக்

பேராசிரியர்
கா. இந்திரபாலா

களின் காலத்தைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டாகக் கிடைக்கின்ற ஆனைக்கோட்டை முத்திரைக் கல்வெட்டும் யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு குறுநில அரசு பற்றித் தெளிவான சான்று பகர்கின்றது. இக் கல்வெட்டு கோ என்ற விருதைப் பெற்ற ஒருவனுடையது. தமிழ்நாட்டில் போல கோ என்ற விருதுடன் இலங்கையிலும் குறுநில மன்னர் இருந்ததை இது உறுதிப்படுத்துகின்றது. (தொடரும்)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி க.தேவராஜா விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-அலுவலக செய்தியாளர்)



நீர்வேலி காமாட்சி அம்பாள் முன்பள்ளியின் கலைவிழாவில் அச்சுவேலி மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட தொப்பி மற்றும் பரிசில்களுடன் மாணவர்கள் காணப்படுவதையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்த விருந்தினர்களையும் படத்தில் காணலாம். (படம்:-த.பரராசசிங்கம்)

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915]

# கல்லடி வேலனும் 9

'நாமிப் பத்திரிகையை ஒருவரைத் தூஷிக்கும் நோக்கமாயல்ல, எமது நயத்துக்காகவும், பிறர்க்கு விஷேச சற்புத்திகளையும், நூதன சம்பவங்களையும், பிற தேச வர்த்தமானங்களையும் அறிவிக்கும் நோக்கமாகவுமே தொடங்கினோம்' (சு.நா.15.09.1902)

இங்கு கல்லடி வேலுப்பிள்ளை தமது பத்திரிகை வெளியிடுகையின் நோக்கை மிகவும் வெளிப்படையான வகையில் கூறியிருப்பது அவதானிக்கத் தக்கது. பத்திரிகை வெளியீட்டிற்கான பணத்தின் அடிப்படை பற்றி இங்கு குறிப்பிடல் வேண்டும்.

இவரது பத்திரிகையின் தொடக்கத்தில் இருந்து 1932 ஆம் ஆண்டு வரையான பத்திரிகைகளில் பின்வரும் பாடல் முகப்புக் கவிதையாக இடம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

*சுகந்தா நிதியந்தா தூயதிடநெஞ*
*சகந்தா செய கந்த வையா –செகந்தாவி*
*யாடுமயி லேறிவிளை யாடசுர ரோடுசம*
*ராடுகுக வாறுமுக வா.*

1930களில் இருந்து வெளிவந்த பத்திரிகைகளில் " *யதார்த்தவாதி, –வெகுஜன விரோதி*' என்ற மகுட வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. (சு.நா.16.11.1932)

***சுதேச நாட்டியத்தின் முகப்பு பக்க வடிவமைப்பில் வரைபுகளின் சிறப்பு:***

ஆரம்பகாலத்தில் அதன் முகப்பில் வரையப்பட்டிருந்த சித்திரம், ஒரு புறத்தில் பனை மரமும், மறுபக்கத்தில் தென்னை மரமும் பதியப்பட்டதாகவும், நடுவில் இடது கைப் பக்கம் பார்த்தவண்ணம் நிற்கும் வகையில் குடும்பியுடன் உள்ள மனித உருவமானது, வலது கைத்தோளின் மேல் துணித்துண்டை அணிந்ததாகவும், இடது கையில் பத்திரிகையை வைத்திருக்கு[illegible] வகையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அந்த மனித உருவத்தின் ஆடையும்,தோற்றமும் காலனித்துவ செல்வாக்கினால் மாற்றப்படாத, சுதேசியைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்றது எனக் கருதமுடிகிறது.

'*சுதேச நாட்டியம்*' பத்திரிகையில் கூடியளவு மனங்கவர்ந்த விடயம் அதனு டைய முகப்பு வரைபுகள் எனலாம். குறிப்பாக, 1909 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவந்த பத்திரிகைகளின் முகப்பு வரைபு, எவரையும் ஈர்க்கும் தன்மை கொண்டதாகும். அச்சுக் கலையானது சுதேச தேவைக்கு, உள்ளூரவர்களால், கலைநுட்பம், கலை நயப்பு, கருத்துச் செறிவு ஆகியவை வெளிப்படும் வகையில் பயன்படுத்தப்பட்டமைக்கான சிறந்த எடுத்துக்காட்டாக இவ் வரைபுகள் காணப்படுகின்றன. ஒரு அலங் கார நடனமாது மையத்தில் அபிநயித்து நிற்க, இரு புறத்திலும் வாத்தியகாரர் வாத்தியங்களுடன் வாசிக்கும் நிலையில் நிற்பதைச் சித்திரிக்கும் காட்சி அதுவாகும். அவர்களின் வாத்தியங்கள் ஆடையலங்காரங்கள் என்பவை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் புறத் தோற்றப்பாட்டினை வெளிப்படுத்துவதாக உள்ளன.

இவற்றை வரைந்தவர் கல்லடியானின் நண்பராக துரைச்சாமியாக இருக்கமுடியும். இதே காலத்தில் வெளிவந்த '*இந்து பால போதினி* என்ற பத்திரிகையி லும் பதிப்பிக்கப்பட்டுள்ள முகப்பு வரைபு மனங் கவர்வதாகவும், அக் கால மக்களின் ஆடை அலங்காரங்களைப் பிரதிபலிப்பதாயு முள்ளது குறிப்பிடத்தக்கது. (இந்து பால போதினி, 25.1.1910.

1920களில் சுதேச நாட்டிய பத்திரிகையின் முகப்பு வரைபு மீண்டும் மாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதைக் காணலாம். அடுத்து வந்த சித்திரிப்பு, காலைக்காட்சியைப் பிரதிபலிப்பதாயும் தாமரை மலர், சூரியன், ஆகியன மையத்திலும், இரு புறங்களிலும் சரஸ்வதி, இலட்சுமி ஆகியோரையும் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

***நிதி நெருக்கடியும், கையொப்பகாரரும், விளம்பரதாரரும்***

ஆரம்ப காலத்தில் பொதுவாக எல்லாப் பத்திரிகைகளுமே வர்த்தக விளம்பரங்களின் உதவியுடனும், கையொப்பகாரரின் உத்தர வாதத்துடனும்தான் நடத்தப்பட்டன.

ஒருவர் தாம் வெளியிடப் போகும் பத்திரிகையை நடத்துவதற்கு வசதிமிக்க சிலரின் உதவியை நாடிஅவர்கள் பணம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டுக் கொள்வர்.

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர் வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.


கையொப்பம் வழங்கி, பத்திரிகை வாங்குவதாக ஒப்புக் கொண்டவர்களுக்குத் தமது பத்திரிகைகளை அனுப்பி வைத்தபின், அவர்கள் ஒப்புக் கொண்டவாறு பணத்தை வழங்காது விடுவதும் உண்டு,

இதன் காரணமாகப் பத்திரி கையாளருக்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தமது சொந்தப் பத்திரிகைகளிலேயே வெளியிட்டுள்ளனர். (தொடரும்)

# பாகிஸ்தான் ஜனநாயகத்திற்கு ஆதரவளிப்பதாக ஒபாமா தெரிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் பாகிஸ்தான் ஜனாதிபதி அஸிப் அலிசர்தாரியும் இரு நாடுகளுக்கிடையேயும் பல மான பங்காளித்துவத்தைக் கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூண்டுள்ளதாக அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவிக்கிறது.

பராக் ஒபாமா சர்தாரியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாகிஸ்தானின் ஜனநாயகத்துக்கு தான் ஆதரவளிப்பதாக தெரிவித்ததாக வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்ட அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.




அமெரிக்க பிரதிநிதி றிச்சர்ட் ஹோல் புரூக் பாகிஸ்தான் பிராந்தியத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு அந்நாட்டுத் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்ற நிலையிலேயே ஒபாமா மேற்படி ஆதரவு சமிக்ஞையை காண்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் அல்கொய்தா மற்றும் தலிபான் போராளிகள் அடைக்கலம் பெற்று சுதந்திரமாக செயற்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் பாகிஸ்தான் இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அந்நாட்டிலுள்ள அல்கொய்தா புகலிடங்களை இலக்கு வைத்து அமெரிக்கா நேரடியாகத் தாக்குதல் நடத்தும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த வார ஆரம்பத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்ட அறிக்கையில், அமெரிக்க மற்றும் பாகிஸ்தான் தலைவர்கள் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் என்பன சம்பந்தமான பொது அக்கறைக்குரிய பிரச்சினைகள் தொடர்பில் இரு நாடுகளுக்கு மிடையே பலமான பரஸ்பர உறவுகளைப் பேண வேண்டியதன் அவசியம் குறித்து இணக்கம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## கனடாவில் கடற்கரையில் ஓய்வெடுக்கும் கடல் நாய்கள்

கனடாவின் ஹேதீவில், கடல்நாய்கள் (சீல்) அதிகம் நிறைந்துள்ளன. அப்பகுதியில் உள்ளவர்கள் இதை வேட்டையாடி இறைச்சிக்காக விற்பார்கள்.



இந்த சீசனில் 2 ஆயிரத்து 200 கடல் நாய்களை பிடித்து விற்க திட்டம் இட்டிருந்தனர். ஆனால், இவற்றை வாங்க வியாபாரிகள் வரவில்லை. இதனால் கடல்நாய்களை வேட்டையாடும் வேலையை ஒத்திவைத்திருக்கிறார்கள். தற்காலிகமாக 'பாசக்கயிற்றில்' இருந்து தப்பிய நிலையில், கடற்கரையில் ஒய்வு எடுக்கும் கடல்நாய்கள் கூட்டம். (ஓ-6)

# மும்பைத் தாக்குதலின் சதித்திட்டம் பாகிஸ்தானில் தான் தீட்டப்பட்டது

## பாக். வெளியுறவு அமைச்சர் ஒப்புதல்

(இஸ்லாமாபாத்)

மும்பையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய கொலைவெறி தாக்குதலில் 185 பேர் படுகொலை செய்யப்பட்டனர். தாக்குதலில் ஈடுபட்ட 10 தீவிரவாதிகளில் 9 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். முகமது அஜ்மல் கசாப் என்பவன் மட்டும் உயிருடன் பிடிபட்டான்.


உலகையே உலுக்கிய இந்த கொடூர தாக்குதலுக்கு காரணமானவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதிகள் என்பது தெரியவந்தது. இது தொடர்பான ஆதாரங்களை, இந்திய அரசு பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்தது. மேலும், விசாரணை நடத்தி தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரியிருந்தது.

முதலில், முரண்டுபிடித்து இதனை ஏற்க மறுத்து வந்த பாகிஸ்தான் அரசு, அமெரிக்காவின் நெருக்கடி காரணமாக விசாரணையை மேற்கொண்டது. ஒருமாத விசாரணைக்குப் பின், மும்பை சதித் திட்டம் தொடர்பான புகாரின் மீது 9 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு அதில் 6 பேரை பாகிஸ்தான் கைது செய்திருக்கிறது. இந்த விவரங்களை நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ரகுமான் மாலிக் செய்தியாளர் களிடம் தெரிவித்தார்.

முன்னதாக அவர், விசாரணை அறிக்கையின் நகலை இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியான சத்தியபிரதாபாலிடம் ஒப்படைத்தார். அப்போது அவர், பாகிஸ்தான் நடத்திய விசாரணை குறித்தும் சத்தியபிரதாபாலிடம் விவரித்தார். மும்பைத் தாக்குதல் பற்றி பாகிஸ்தான் நடத்திய விசாரணை குறித்து நிருபர்களிடம் ரகுமான் மாலிக் கூறியதாவது,

மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதலில் சதித் திட்டத்தின் ஒரு பகுதி பகிஸ்தானில் தீட்டப்பட்டது தான். இது தொடர்பாக 9 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு 6 பேரை பாகிஸ்தான் புலனாய்வுத்துறை பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். இவர்கள் அனைவர் மீதும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றார். (ஓ-6)

## சீனாவில் நீரின்றி காய்ந்து கிடக்கும் ஆற்றுப்படுக்கை



சீனாவின் தென்பகுதியில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் பல இலட்சம் ஏக்கர் வீவசாய நிலங்கள் நீரின்றி வரண்டு கிடக்கின்றன. மேகம் திரண்ட பகுதிகளில், அவற்றை பீரங்கியால் சுட்டுத்தள்ளி செயற்கை மழையை பெய்விக்க நடந்த முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

வரட்சியால் மக்கள் மட்டுமின்றி, கால் நடைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தலைநகர் பீஜிங்கின் புறநகரில் உள்ள ஒரு ஆற்றுப்படுக்கை நீரின்றி காய்ந்து கிடக்கிறது. (ஓ-6)

# நியூசிலாந்து தீவில் பயங்கர நில நடுக்கம்

(வெலிங்டன்)

நியூசிலாந்து நாட்டின் வடக்கு பகுதியில் கெர்மடி தீவு உள்ளது. இந்த தீவு அருகே கடலில் நேற்று அதிகாலை மிகப் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. ரவோல் தீவை மையமாகக் கொண்டு இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 6.1 என்று பதிவாகி இருந்தது. கடலுக்குள் 35 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் தோன்றியது. இதனால் தீவுகள் குலுங்கின. தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அலறியடித்து ஓடினார்கள்.

சில வினாடிகள் நீடித்த இந்த நில நடுக்கத்துக்கு சில வீடுகள் இடிந்து விழுந்தன. மற்ற சேத விபரங்கள் தெரியவில்லை.

நியூசிலாந்து நாட்டின் வடக்கில் உள்ள



தீவுகளில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது உண்டு. எரிமலைகளும் அடிக்கடி வெடித்து சிதறும். எனவே இன்று ஏற்பட்ட நில நடுக்கம் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை. (ஓ-6)

# நியூயோர்க் நகர் அருகே விமானம் மோதி 49 பேர் பலி


(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகர் அருகே வீடு ஒன்றின் மீது விமானம் மோதி விபத்துக்குள்ளானதில் 49 பேர் பலியானார்கள்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலிருந்து பபலோ நகருக்கு 50 பேர்களை ஏற்றிச் செல்லக் கூடிய சிறிய விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது.

பபலோ விமான நிலையத்தை அடைவதற்கு 5 நிமிடம் முன்பாக இந்த விமானத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டது. இதனால் விமானம் கட்டுப்பாட்டை இழந்து அந்த பகுதியிலிருந்த வீடு ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது. விமானம் மோதியதும் அந்த வீடு முழுவதும் தீப்பற்றிக் கொண்டு கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

இதில் விமானத்தில் இருந்த 44 பயணிகள் உட்பட 49 பேர் தீயில் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து சுற்றியுள்ள வீடுகளிலிருந்தவர்கள் அகற்றப்பட்டனர். தீப்பிடித்துக் கொண்ட வீட்டிலிருந்து



தீ பரவி மற்ற வீடுகளையும் பாதிக்கத் தொடங்கியது. விபத்துக்குள்ளான விமானம் மோதிய வீட்டில் இருந்தவர்கள் பற்றிய விவரம் தெரியவில்லை. அமெரிக்காவின் காண்டி னென்டல் ஏர்லைன்சுக்கு விபத்துக் குள்ளான விமானம் சொந்தமானது. விபத்துக்குள் ளான இடத்தில் தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த விமான விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஓ-6)

# அழகிய பெண் உளவாளிகளால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஆபத்து

## ஐரோப்பிய ஆணையகம் எச்சரிக்கை



வளவளப்பான கேசமும் நீண்ட கால்களும் உள்ள அழகான பெண் உளவாளிகளால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஆபத்து காத்திருப்பதாக ஐரோப்பிய ஆணையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறைவேற்றதிகாரமுள்ள ஸ்தாபனமாக விளங்கும் ஐரோப்பிய ஆணையகத்தின் மனித வள அதிகாரிகளுக்கு இது தொடர்பில் எச்சரிக்கை துண்டுப் பிரசுரமொன்று விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய ஒன்றியமற்ற நாடுகளைச் சேர்ந்தவர்களை பணிக்கமர்த்தும்போது எச்சரிக்கையுடன் செயற்பட மேற்படி துண்டுப் பிரசுரத்தில் வலியுறுத்தப்பட்டிருந்ததாக ஆணையகத்தின் பேச்சாளர் வலேரி ரம்பி தெரிவித்தார்.

உபசரிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், தனியார் முகவர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களாக தம்மை இனங்காட்டிக் கொண்டு மேற்படி உளவாளிகள் ஐரோப்பிய ஆணையகத்தில் ஊடுருவி தகவல்களை சேகரிக்க முயற்சிக்கக் கூடும் எனத் தெரிவித்த ரம்பி அந்த உளவாளி நீண்ட கால்களும் வள வளப்பான கூந்தலும் உள்ள பயிற்சியாளராகவும் ஆணையகத்தில் நுழைய வாய்ப்புள்ளது என்று கூறினார். (ஓ-6)

## உலக தரிசனம்

# பிலிப்பைன்ஸில் பூகம்பம் 50 க்கும் மேற்பட்டோர் காயம்

(ஜகார்த்தா)

பிலிப்பைன்ஸ் அருகில் உள்ள, இந்தோனேசியாவின் சுலாவேசி தீவை மையமாகக் கொண்டு ஏற்பட்ட பூகம்பத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேதமடைந்தன.

இதில் 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இந்திய நேரப்படி கடந்த புதன்கிழமை இரவு 11.04 மணிக்கு பிலிப்பைன்சுக்கு அருகே சுலாவேசி தீவுப் பகுதியில் உள்ள கடலில் 7.2 ரிக்டர் அளவில் மிகப் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது.

காயப்பட்டவர்களில் எட்டுப் பேர், சுவர் இடிந்து விழுந்ததில் தலையில் பலத்த காயமடைந்துள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள், பள்ளிகள், சுகாதார மையங்கள் மற்றம் கட்டடங்கள் பெருத்த சேதமடைந்தன.

இங்குள்ள மாவட்ட மருத்துவமனையில் ஏற்பட்ட சேதம் காரணமாக அங்கிருந்த நோயாளிகள் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டனர். (ஓ-6)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியின் அதிபர் எஸ்.புண்ணியசீலன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எம்.சாந்தசீலன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஓ-134)

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன், சிறப்பு விருந்தினராக காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் இ.சிவகுமாரன், கௌரவ விருந்தினர்களாக காரைநகர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஸ்வரன், பழைய மாணவர்களான தி.இராதாகிருஷ்ணன், சண்முகரூபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4-247)

## இலங்கை வங்கியின் முகாமைத்துவப் பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர் நேர்முகப் பரீட்சைக்காக யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவானோரில் கொழும்பில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இம்மாதம் 16 ஆம் திகதி இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்தின் 26ஆம் மாடியில் பிற்பகல் 1 மணிக்கு சமூகம் கொடுத்து நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு ஏற்கனவே பத்திரிகை வாயிலாக அறியத் தந்துள்ளோம்.

கொழும்பில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்திகளுக்குரிய நேர்முகப் பரீட்சை இம்மாதம் 24, 25 ஆம் திகதிகளில் இலங்கை வங்கியின் வட பிராந்திய காரியாலயத்தில் நடாத்தப்படவுள்ளது. சகலருக்குமான அனுமதிப்பத்திரங்கள் இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

தயவுசெய்து யாழ்ப்பாணத்தில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் இக் காரியாலயத்துடன் நேரடியாக தொடர்புகொண்டு தமது வரவினைப் பதிவுசெய்து நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் ந.சிவரட்ணம் கேட்டுக் கொள்கின்றார்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:-
021 222 3985,
021 222 2735 ஆகும். (ஓ)

## மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம், இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி சுன்னாகம் தெற்கு ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு வெஸ்ரோம் விளையாட்டுக்கழகம் எதிர் புவனேஸ்வரி அம்பாள் ஏ விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4 மணிக்கு நியூகிற் விளையாட்டுக் கழகம் எதிர் அண்ணா விளையாட்டுக் கழகமும் நாளை பிற்பகல் 3 மணிக்கு கண்ணகி ஏ விளையாட்டுக் கழகமும் எதிர் வைகறை விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4 மணிக்கு ஐங்கரன் விளையாட்டுக்கழகமும் எதிர் புவனேஸ்வரி அம்பாள் பி விளையாட்டுக்கழமும் மோதவுள்ளன. (6)

## கற்கோவளத்தில் மீன்தூள் அரைக்கும் தொழிற்சாலை திறப்பு


(மருதங்கேணி)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் கற்கோவளத்தில் 9இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் மீன் தூள் அரைக்கும் தொழிற்சாலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இவ் மீன் தூள் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வறிய பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-35)

# தேர்தல்களை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தலில் வாக்கு மோசடிகள் நடந்தால் வாக்களிப்பு இரத்துச் செய்யப்படுவதுடன், தேர்தல் முடிவுகளும் வெளிவராது என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இன்றைய வாக்களிப்பின் போது மோசடிகள் மற்றும் கள்ளவாக்குப் பதிவுகள் நடைபெறுவதாக தகவல் கிடைத்தால் தேர்தல் முடிவுகள் வெளிவராது.

ஒரு வாக்குச் சாவடியில் மோசடி நடந்தாலும் அது முழுத் தேர்தலையும் பாதித்துவிடும்.எனவே தேர்தல்களை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரசியல் கட்சிகளிடம் நான் கோரிக்கை விடுக்கிறேன் என அவர் கூறினார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த தயானந்த திஸாநாயக்க, இம்முறை வாக்குப் பெட்டிகள் தேர்தல் நிலையங்களிலிருந்து வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் போது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனக் கூறினார்.

வாக்களிப்புக்கள் முடிந்து வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிப்பதற்கும் இடைப்பட்ட நேரப் பகுதியில் வாக்குப் பெட்டிகளைத் திறந்து கள்ளவாக்குப் பதிவுகளை மேற்கொள்ள முடியாதபடி வாக்குப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்காளர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தே வாக்களிக்க முடியும் எனக் குறிப்பிட்ட தேர்தல்கள் ஆணையாளர், இலங்கையிலும் இந்தியாவைப் போன்று சுதந்திரமான தேர்தல்கள் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுவது அவசியம் எனச் சுட்டிக் காட்டினார். (ஓ-6)

## மேலதிக சிகிச்சைக்காக 6 நோயாளர்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வன்னியிலிருந்து புதன்கிழமை கப்பலில் திருகோணமலை வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்ட நோயாளர்களில் 125 பேருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், மேலதிக சிகிச்சை வழங்க வேண்டிய 6 நோயாளர்கள் நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக திருமலை வைத்தியசாலை மருத்துவ பணிகளுக்கான இணைப்பாளர் டாக்டர் ஞானகுணாளன் தெரிவித்தார்.

எலும்பு முறிவுக்கு உள்ளான நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கென வைத்திய நிபுணர் ஒருவர் உட்பட நான்கு மருத்துவர்கள் வைத்தியசாலைக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

# வன்னியில் வைத்தியசாலைகள் மீதான தாக்குதலில் சுகாதாரத்துறையைச் சேர்ந்த 3 பணியாளர்கள் பலி

## டாக்டர் சத்தியமூர்த்தி தகவல்

(கொழும்பு)

வன்னியில் சகல வைத்தியசாலைகளும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. இந்தத் தாக்குதல்களில் சுகாதாரத் துறையைச் சேர்ந்த மூன்று பணியாளர்கள் பலியாகியுள்ளனர் என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நீ. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

சுகாதார சேவை அதிகாரிகளுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள தகவலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுமே தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன. இந்த தாக்குதல்களில் சுகாதாரத் துறையைச் சேர்ந்த 3 பணியாளர்கள் பலியாகியுள்ளனர். பல ஊழியர்கள் தாக்குதல் அச்சம் காரணமாக வைத்தியசாலைகளில் கடமைக்கு சமூகமளிக்காத போதிலும் மோசமாகக் காயமடைந்து வருபவர்களுக்கும் ஏனைய நோயாளர்களுக்குமான வைத்தியசேவைகளை அங்கு தொடர்ந்து வழங்கி வருகின்றோம்.

நாளாந்தம் 60 பேர் வரையில் காயமடைந்து வைத்தியசாலைகளுக்கு வருகின்றனர். இவர்களுக்கு முக்கியமாக வழங்கப்பட வேண்டிய நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் உட்பட முக்கிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

இந்தப் பற்றாக்குறை நீக்கப்படுவதுடன் காயமடைந்த பலரது உயிர்களைக் காப்பதற்காக வைத்திய சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது. (ஓ-6)


பாராட்டி வாழ்த்துகிறோம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டத்தின் உதவிப் பணிப்பாளராக கடந்த 13 வருடங்களாக சேவையாற்றி 18.02.2009 முதல் தே.இ.சே. மன்றத்தின் வடமாகாண பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் உயர்திரு தி.சிவதட்சணாமூர்த்தி அவர்களை விநாயகப் பெருமான் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம். உத்தியோகத்தர்கள்

(2256)



வலி கிழக்கு (வடபகுதி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி.

பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பப்படிவங்களை காரியாலய வேலை நேரத்தில் ரூபா பத்து (10.00) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் *பொது முகாமையாளர், வலி கிழக்கு (வட பகுதி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி* என்ற முகவரிக்கு 25.02.2009 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

பதவிகள்

| | |
|---|---|
| *1.கிளை மேற்பார்வையாளர்* | *சம்பள குறியீட்டு இல 307/13* |
| *2.எழுதுநர்* | *சம்பள குறியீட்டு இல 302/16* |
| *3.லொறிச் சாரதி* | *சம்பள குறியீட்டு இல 308/15* |
| *4.விற்பனை உதவியாளர்* | *சம்பள குறியீட்டு இல 308/17* |
| *5.களஞ்சிய கூலியாளர்* | *சம்பள குறியீட்டு இல 318/17* |
| *6. காரியாலய சேவகர்* | *சம்பள குறியீட்டு இல 317/16* |

மேற்படி பதவிகளுக்கான சம்பள விபரங்கள், கல்வித் தகைமை, வயது போன்ற மேலதிக விபரங்களை சங்க தலைமைக்காரியாலயத்தில் பார்வையிடலாம். சங்கப் பணியாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

14.02.2009

பொதுமுகாமையாளர்
வலிகிழக்கு (வடபகுதி)
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி.

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

5-II

### கட்மியம்

அநுராதபுரம் மாவட்டத்தில் தரை மேல் நீரில் (Surface water) நடாத்தப்பட்ட ஆய்வுகளில் கட்மியம் எனப்படும் இலகுவில் பிரிந்தழியாத உலோகத்தின் (Heavy Metal) அளவு அதிகமாக இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட பீடை நாசினிகளிலிருந்து இலகுவில் பிரிந்தழிய முடியாத இவ்வகை. உலோகங்கள் குடிநீரில் செறிவடைந்து காணப்படுவதனால் எமக்கு தீங்கு விளைவிக்கும் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. பசுமைப்புரட்சியால் நீர் மாசடைந்து விட்டதுடன் தனி மனித சுகாதாரத்தையும் கேள்விக்குறியாக்கி விட்டது. இப்போதாவது இதிலிருந்து மீள நினைக்காவிடில் எப்போதும் எமக்கு மீட்சியே இல்லை. வருகின்ற எமது சந்ததி நோய்வாய்ப்பட்ட சந்ததியாகிவிட இனியும் விடக்கூடாது.



### உலகம் எங்கே போகிறது?

குடிக்க நல்ல நீர் இல்லை. குளிக்க தேவையான நீர் இல்லை. நீர்ப்பாய்ச்சவும் நிறைந்த நீர் இல்லை. இந்த நிலையில் சாதாரண குடியானவனின் குடித்தனம் கேள்விக்குறியாகி விட்டது. இங்கே வேளாண்மையை எப்படி செய்யலாம்.

விஞ்ஞானம் நல்ல தண்ணீர் தேடி குடத்துடன் மற்றைய கோள்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது. உவர் நீரை நன்னீராக மாற்றியும் பார்த்திருக்கின்றது. ஆனால் அது செல்வந்த நாடுகளுக்கு மட்டும் ஏற்ற தொழில் நுட்பமாயிற்றே தவிர வளர்ந்து வரும் நமது நாட்டுக்கு பெரிதாக பொருந்தவில்லை.

### பனிப்பாறைகள் உருகுகின்றன.

பூமி வெப்பமடைந்து செல்வதனால் அன்டாட்டிக்காவிலுள்ள பனிப்பாறைகள் உருக ஆரம்பித்துவிட்டன. இதனால் கடல் மட்டத்தின் அளவு உயர்ந்து கொண்டிருக்கிறது. பல சிறிய தீவுகள் கடலினுள் அமிழும் நிலைக்கு வந்துள்ளன. அதிர்ச்சி தரும் ஆய்வுத்தகவல்கள் இவை. பூமியில் நீர் சூழ்ந்திருக்கும் பகுதி அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

### வேளாண்மையினால் நீர் மாற்றமடைகிறது.

*பசுமைப் புரட்சியின் பாதகங்களிலொன்று நீர் மாசடைந்ததாகும். இருக்கின்ற நீர் அனைத்தும் உவர் நீராகிக் கொண்டிருப்பதனால் 2050க்குப் பின்னர் யாழ்ப்பாணம் பாலைவனமாக மாறிவிடும் என்கிறார்கள் நீரியல் ஆய்வாளர்கள்.*

*பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்திய திருந்திய இனங்கள் உள்ளீடுகளை நம்பி வாழும் பயிர்களாகும். இந்த உள்ளீடுகளில் நீரையும் சேர்க்கப்பட வேண்டியதாகி விட்டது. இன்றிலிருந்தாவது எமக்கு கிடைக்கும் நீரை முறையாக முகாமைப்படுத்தாவிட்டால் எமது சந்ததி நீர் இல்லாது நிர்க்கதியாகும். நிலை வரப்போகின்றது. வேளாண்மையின் தன்மையை மாற்றியமைத்து நீரின் தேவையை மட்டுப்படுத்த அனைவரும் முயற்சிக்க வேண்டும்.*

'நக்கிற நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணி' தான். 'நிஷா' எனும் கோரப்புயல் அடை மழை காரணமாக வட பகுதியே நீரினுள் மூழ்கியது. எவரும் எதிர்பார்த்திருக்காத இயற்கையின் சீற்றமிது. அவ்வளவு வெள்ளமிருந்தும் குடிப்பதற்கு நீர் இல்லையே. மலசலகூடத்திலிருந்து நீர் உள்ளிலிருந்து வெளியே வந்து கிணற்று நீருடன் கலந்ததால் மக்கள் குடிநீருக்கு அலைந்தனர்.




நீரின் மகத்துவம் அனைவருக்கும் உணர்த்தப்பட்டது. அனைவருக்கும் உணர்த்தப்பட வேண்டிய ஒன்று. 'இதிலிருந்தாவது சிக்கனமாகவும் சிறந்த முறையிலும் நீரைப் பயன்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும்.

### நீர் பாய்ச்சுதல்

வேளாண்மையில் நீரின்றி எதுவுமில்லை. வெறுமனே மண் இருந்து எந்த பிரயோசனமுமில்லை. நீரினூடாகவே மண்ணிலிருக்கும் சத்துக்கள் வேரினூடாக பயிருக்கு செல்கின்றது. இங்கே விளைவிக்கும் பயிருக்கு தேவையான நீரை பெறுவதிலேயே சிக்கல் எழுந்துள்ளது.

காலபோகம் முழுவதுமாக மழையை நம்பிய பயிர்ச் செய்கையாக இருப்பினும் அவ்வப்போது காலநிலை சடுகுடு விளையாடுவதால் விவசாயிகளும் ஏன் அதிகாரிகளும் கையை விரிக்க வேண்டியவர்களாகின்றனர். வெறுமனே தூறிவிட்டு போன மழையால் மனம் நொந்து நெல்லுக்கு பம்பி பூட்டி நீரிறைக்க விரைந்த விவசாயிகளின் மனக்குமுறலைக் கண்டு பின்னர் கொட்டித்தீர்த்து வெள்ளக்காடாக மாற்றி விட்டதை சென்ற மாதங்களில் அனைவரும் அனுபவித்தோமே. வெள்ளி பார்த்து செய்த விவசாயமெல்லாம் மெல்ல மெல்ல மாற்றம் கண்டிருக்கிறது.

### கொடுத்தது மாறி நீர்பாய்ச்சுதல் நல்லது

அநேகமான கிணறுகளில் பங்குக் கிணறுகள் தான் அதிகம். இருந்த காணியை, வயலை நாலாகப் பிரித்துக் கொடுத்து அவர் போய்விட்டார். நாலுகளில் ஒன்று அதை விற்று வெளிநாடு போக அதை வாங்கியவர் பங்குக்காக மல்லுக்கட்டுவது எங்கள் ஊரில் தானே நடக்கின்றது.

பங்குக் கிணறு படும் பாடு பரிதாபமப்பா, வெறுமனே குழாயை இறக்கி நீரை பாய்ச்சினால் சரியென்று நினைக்கிறார் போலும். நாலு பேரும் நாலு பக்கத்தால் உறுஞ்சி எடுக்கும் நீரை ஒரே நேரத்தில் கிணற்றினால் கொடுக்க முடியவில்லை. அது அடியொட்ட வற்றி முடிய முன் மற்றையவர் உறிஞ்சத் தொடங்கி விடுவார். கிணறு களைத் திருக்கையில் தருணம் பார்த்து கீழிருக்கும் உவர் நீர் உட்புக ஆரம்பித்து விடும். தன்பக்க நியாயத்தை மட்டுமே பேசும் தருமருக்கு எது சொன்னாலும் ஏறாது. இறுதியில் யாருக்கும் பிரயோசனம் இல்லாது கிணறு உவர் நீராகிவிடும்.

### கிணற்று சுத்தம் வேண்டும்.

பங்குக் கிணற்றுக்கு இப்படியொரு நிலை. வெளியே வளர வேண்டிய மரங்களெல்லாம் கிணற்றுக்குள்ளே வளர்கின்றன. அநேகமான நேரங்களில் இம் மரங்களெல்லாம் வளர்ந்து கிணற்றை முழுமையாகவே மறைத்து விடுகின்றன. ஆல் அரசுடன் வேம்பும் வளர்கின்றன. பப்பாசி, நாயுண்ணி, எனப் பலவகையான மரங்கள் செடிகள் பரந்து வளர்கின்றன. அவற்றை அகற்றுவதற்கு எவரும் முன் வராதது சமூகப் பொறுப்பின் விழுக்காட்டை காட்டுகின்றது.

இவற்றிலிருந்து விழுகின்ற இலைகளனைத்தும் உக்கி அந்த நீர் மாசடைய காரணமாகி விடுகின்றன.

### நீர் சமநிலை பேணும் விவசாயம் தேவை

வெவ்வேறு பயிர்களுக்கு வேறு வேறு அளவில் நீர் தேவைப்படும் பயிர்ச் செய்கையின் திட்டமிடலின் போது இலாபம் ஒன்றை மட்டும் நோக்காது இருக்கக்கூடிய நீருக்கான பயிர்வகைகளை தெரிவு செய்தல் சிறந்தது. பங்குதாரர்கள் இதில் இன்னும் கரிசனை கொள்வது நல்லது. நீர்ப்பாய்சுதலில் கிணற்றுக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும். தானாக நீர் ஊறி வருவதற்கு இடமளிக்க வேண்டும்.

### நீர் பாய்ச்சுதலில் இழப்பைத் தவிர்த்தல்

*"நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசித்ததாம்"* முதியோர் வாக்கில் எவ்வளவு விளக்கம். நீர் பாய்ச்சும் போது இழப்புகளை முடிந்த வரையில் தவிர்க்க வேண்டும்.

இப்போதெல்லாம் சொட்டு நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனம் போன்ற முறைகளின் மூலம் பயிருக்கு தேவையான நீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் வழிகளுண்டு. தூவல் நீர்ப்பாசனத்தின் மூலமாக பீடைப் பெருக்கத்தையும் சிறப்பாக கட்டுப்படுத்தலாம். குறிப்பாக சிற்றுண்ணி மற்றும் பனிப்பூச்சிகளின் பெருக்கத்தை இலகுவாகக் கட்டுப்படுத்தலாம். இம்முறைகளை பயன்படுத்துவதற்கு பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் திட்டங்களை விரிவுபடுத்தலாம். இதில் இணைந்தவர்களை பாராட்டலாம். தகுதியான திட்டங்கள் அவை.

### கிணற்று நீர் அசுத்தமடைதல்

நகர்ப்புறங்களிலுள்ள கிணறுகளில் குறிப்பாக குடிப்பதற்காக பயன்படுத்தப்படும் கிணற்று நீரில் மலசல கூடத்தின் கசிவுகள் காணப்படுவதும் அதன் மூலமாக (E.coli) போன்ற பக்டீரியாக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அண்மைக்கால ஆய்வுகள் குறிப்பிட்டுக் கூறுகின்றன.

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

அதிலும் பொது இடங்களிலுள்ள குடிநீர் கிணறுகளிலேயே இந்நிலை காணப்படுகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஒரு சில பாடசாலைக் கிணற்று நீரிலும் இத்தன்மை காணப்பட்டு உடனடி நிவாரணமும் காணப்பட்டது.

இவற்றுக்கெல்லாம் காரணமாக கிணற்றிற்கும் மலசல கூட கழிவு கிடங்கிற்குமிடையிலான இடைவெளி 30 அடியிலிருந்து குறைவாகக் காணப்படுவதுதான். இடைவெளி சரியாக இருந்தும் கழிவு குடிநீர் கிணற்றின் நீரோட்டத்தில் கலப்பதும் இன்னொரு காரணம்.

குடிநீருக்கென பயன்படுத்தும் கிணறுகளையும் குழாய்க் கிணறுகளையும் சுத்தமாக வைத்திருப்பது மிக மிக அவசியம். (தொடரும்)

# மண்புழு வளர்ப்பும் அனுகூலங்களும்

சேதன விவசாயத்தை ஆதரிக்கின்ற போக்கு உலகளாவிய ரீதியில் வலுப்பெற்றுவரும் இவ்வேளையில், அசேதன இரசாயனங்களால் கிடைக்கும் நன்மைகள் யாவற்றையும் சேதன விவசாயத்தினூடு திருப்தி செய்து விட முடியுமா என்கின்ற நியாயமான கேள்விக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பதில் கொடுக்க வேண்டியது துறைசார்ந்தவர்களினது கடமையாகும்.



எனவே இக்கேள்விக்கான விடைபற்றி ஆராயும் போது 'ஆம்' என்ற பதில் வருவதற்கு பிரதானமான ஆதாரமாக இருப்பது மண்புழு வளர்ப்பும் அதனால் பெறப்படுகின்ற மண்புழு உரம் மற்றும் மண்புழு வடிதிரவம் போன்றனவாகும். இனி இம் மண்புழு வளர்ப்பு பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.


பொருத்தமான புறக்காரணிகளை உரிய முறையில் வழங்குவதன் மூலம் மண்புழுக்களை இனம் பெருக்கி அவற்றின் எண்ணிக்கையையும், தொழிற்பாடுகளையும் அதிகரிக்கும் அறிவியல்சார் செயற்பாடு மண்புழு வளர்ப்பு எனப்படும். இவ்வாறு நாம் சாதகமான செயற்கைச் சூழலை வழங்குவதன் மூலம் அவற்றை சிறிய இடப்பரப்பில் விரைவாக அதிக எண்ணிக்கையில் இனம் பெருக்கிக் கொள்ள முடியும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பா, சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்றவை மண்புழு உரஉற்பத்தியில் முன்னணி வகிக்கின்ற அதேவேளை, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் மண்புழு வளர்ப்புப்பற்றிய விழிப்புணர்வால் மண்புழு உர உற்பத்தி அண்மைக்காலங்களாக அதிகரித்து வருகின்றது. இது யாழ். விவசாயிகளுக்கும் உரத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதுடன், வன்னி எருவிற்கான மாற்றீடாகவும் அமையும்.

### மண்புழு வளர்ப்பின் நோக்கமும் அவற்றின் நன்மைகளும்

கால்நடைக்கான உணவு, மண்ணைப் பண்படுத்தல், மண்புழு வடிதிரவம், மண்புழு உர உற்பத்தி, போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக மண்புழு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது எனினும் எமது பிரதேசத்தில் எல்லா மக்களாலும் அறியப்பட்டிருப்பது மண்புழு உர உற்பத்தி மட்டுமே மண்புழு உரத்தில் அப்படி என்னதான் நன்மைகள் இருக்கின்றன. மற்றும் மண்புழு உர உற்பத்தி தவிர்ந்த வேறு எந்ததேவைகளுக்காக இம் மண்புழுக்களை வளர்த்துப் பயன்பெறலாம் என்பனவற்றைப் பற்றி இனிப்பார்ப்போம்.

- ✪ மண்புழுக்கள் மிகக் குறைந்த செலவில் நிறைந்த விலங்கு புரதத்தை வழங்க வல்லவை. அதாவது இவற்றின் மூலம் கோழி, பன்றி, மீன்கள் போன்றவற்றுக்கு உணவளிக்கலாம். அத்துடன் மீன்பிடிப்பதற்கான தூண்டிற்பொறியாகவும் இவை பயன்படுத்தப்படுகின்றன.
- ✪ தாவர விலங்கு கழிவுகள், மற்றும் பலவிதமான சேதனச்சேர்வைகள் போன்றவற்றை மண்ணுடன் நன்றாக கலக்கச் செய்வதற்கு மண்புழுக்கள் உதவுகின்றன. பல மில்லியன் வருடங்களாக இவை சத்தமில்லாமல் நிலத்தைப் பண்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதன்மூலம் மண் மேற்பரப்பிலிருந்து சேதனச் சேர்வைகள் மண்ணரிப்பின் மூலம் வீணாக இழக்கப்படுவது தடுக்கப்படுகிறது. சராசரியாக மண்புழு ஒன்று 2 வருடத்தில் 15-40 கிராம் மாட்டு சாணியை உள்ளெடுத்து மண்ணுடன் கலக்க வல்லவை.




- ✪ மண்புழுக்கள் பெரியளவிலான கனியத் துணிக்கைகளை சிறு சிறு அலகுகளாக உடைகின்றன. இதன்மூலம் தாவரங்களினால் உடனடியாக அகத்துறிஞ்சக் கூடிய (Readily absorbable) கனியங்களின் அளவு மண்ணில் அதிகரிக்கப்படுகின்றன.
- ✪ கட்மியம் (Cd) போன்ற சில பார உலோகங்களை மண்புழுக்கள் தமது உணவுக் கால்வாய் தொகுதியில் வடிகட்டுவதால் மண்புழு உரத்தில் இவ்வாறான பார உலோகங்களின் அளவு குறைக்கப்படுவதாக நம்பப்படுகின்றது.

த. கஜந்தன்
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம், யாழ் பல்கலைக்கழகம்

- ✪ மண்புழுக்கள் சேதனக் கழிவுகளை தமது உணவுக் கால்வாயினூடு உள்ளெடுத்து அவற்றைப் பின் கழிவுகளாக (Cast) வெளியேற்றுகின்றன.

இவற்றின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் பலவகையான நுண்ணங்கிகள் காணப்படுகின்றன. அத்துடன் உணவுக் கால்வாயில் புரத்தியேசு, அமைலேசு, இலிப்பேசு, செலுலேசு, கைற்றினேசு போன்ற நொதியங்களும் காணப்படுகின்றன.

எனவே இந்த நுண்ணங்கி மற்றும் நொதியச் செயற்பாடுகள் காரணமாக சேதனக்கழிவுளின் 'மக்காகுதல் செயற்பாடு' (Humification) துரிதப்படுத்தப்படுகிறது. (தொடரும்)

> அகங்காரமும் கோபமும் ஒன்று சேராதபடி அடிக்கடி கண்காணிக்க வேண்டும். அகங்கார மும் கோபமும் மனிதனை அழிக்க வல்லவை.
>
> – சுவாமி இராமதாசர்

வலம்புரி

## யாரொடு நோவோம் யார்க்கெடுத்து உரைப்போம்

வன்னியிலிருந்துவரும் செய்திகள் நெஞ்சைப் பிளக்கின்றன. குடும்பமாக போய்ச் சேர்ந்துவிட்டார்கள் என்ற செய்தி, தாயை, தந்தையை, பிள்ளையை இழந்துவிட்டதான தகவல்கள் என எல்லாமே உள்ளத்தை வதைத்து உதிரத்தை உறையவைக்கின்றன.

வன்னி யுத்தத்தை நிறுத்துமாறு ஐ.நா. சபை முதல் பரிசுத்த பாப்பரசர் ஈறாகக் கேட்டுவிட்டனர். முடிபே இல்லை. ஒவ்வொருநாளும் செத்து மடிவதுதான் உங்கள் தலைவிதி எனத் தமிழனுக்கு தலை எழுத்து எழுதிய வேதவித்தகனே வஞ்சகன் என்று எண்ணும் அளவுக்கு ஈழத் தமிழருக்கு உதவ எவருமே முன்வரவில்லை.

ஐ.நா சபை, அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகள், கவலை தெரிவிப்பதுடன் தமது பணியை நிறுத்தியுள்ளன.

அண்டை நாடான இந்தியா கபடத்தனத்துடன் ஈழத்தமிழரின் உயிரெடுப்பிற்கு எருமை வாகனமாகச் செயற்படுகிறது. எங்கள் தமிழக உறவுகள் என்ன செய்ய முடியும்?

அவர்கள் தங்களால் இயன்ற அளவில் போராட்டங்களை நடத்துகின்றனர். சிலர் தீக்குளித்து தியாகம் செய்தனர். எதுவுமே ஈழத் தமிழரைக் காப்பாற்றவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே மௌனப் பிரார்த்தனைகள், தொடர் உண்ணாவிரதங்கள் என்ற அமைதிவழித் தியானங்கள் நடக்கின்றன.

ஓ! இறைவா இந்த நாட்டில் அக்கிரமம் ஓங்கிவிட்டது என்பதை உணர முடிகிறது. கொலைகள் நிறைந்த இந்தப் பூமியில் உன்னால் அன்றி வேறு எவராலும் யுத்தத்தில் தினம் தினம் பலியாகும் மக்களைக் காப்பாற்ற முடியாது.

எத்தனையோ நாட்களாக மக்கள் உயிரிழுந்து வரும் வேளையில் இப்போதுதான் இலங்கை விவகாரத்தை அறிய பிரிட்டன் விசேட தூதுவரை நியமிக்கிறது.

மருந்துக்குப் பணம் கேட்டால் தகனம் செய்வதற்கு தருவதாகக் கூறும் நிலையிலேயே உலக நாடுகள் உள்ளன.

இறைவா! உன் திருவருளை மட்டுமே நாங்கள் நம்பியிருக்கிறோம். எங்கள் இழப்பைத் தடுக்க உன்னையன்றி யாரொடு நோவோம், யார்க்கெடுத்து உரைப்போம்!

இறைநம்பிக்கையும், தெய்வீகமும் பொலிந்த ஈழத்தமிழ் மண்ணில் நடக்கும் சங்காரத்தை நீ தடுக்கவில்லையாயின், இறைநம்பிக்கையும் அற்றுப்போய் எல்லாம் கந்தறுந்த காவடியாகி விடும்.

இறைவா! நீயே துணை. நீயே காப்பாற்று! உன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

# ஐ.தே.க.வை ஒழிக்கும் மஹிந்தவின் முயற்சி தோல்வியிலேயே முடியும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினை ஒழிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியாக முயன்று வருகின்றார். இதற்கு முன்னரும் பல தலைவர்கள் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், எவராலும் கட்சியை அழிக்க முடியவில்லை. எத்தகைய பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து கட்சியினை காப்பாற்ற நாம் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புத்தளம் நகரில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறுகையில்,

ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவில் பராக் ஒபாமா பதவியேற்ற இந்தக் காலத்தினுள் அவர் என்ன செய்தார்? தனது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவை சீர்செய்ய தனது நாட்டின் உற்பத்தித் துறையை விருத்தி செய்ய, கல்வி அபிவிருத்தியை மேம்படுத்த அவர் 80 ஆயிரம் கோடி டொலரினை ஒதுக்கீடு செய்து பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளார்.

எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ன செய்கிறார்? நாட்டில் வலம்வந்து கூட்டங்களை நடத்திக் கொண்டு ஜனாதிபதி மாளிகைக்கு மக்களை அழைத்து சாப்பாட்டுப் பார்சல்களை வழங்கி வருகின்றார்.

நாட்டைப் பற்றிச் சிந்திப்பதாய் இருந்தால் தேர்தலையும் நடத்திக் கொண்டு நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடித் தருவதற்கு ஜனாதிபதி முயற்சித்திருக்க வேண்டும். அவ்வாறு அவர் தேடியுள்ள தீர்வுகள் என்ன? ஒன்றுமில்லை. இன்று மஹிந்தவுக்கு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் போயுள்ளது.



தீர்க்க முடியாத காரணத்தினால் தேர்தல்களை நடத்திக் கொண்டிருக்கின்றார். இதனால் இருக்கின்ற பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றன. நாட்டில் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்வதால் மக்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. இன்று யுத்தம் முடிவடைந்துள்ளது. இன்னும் சிறிது காலத்திற்கே யுத்தத்தைப் பற்றிப் பேச முடியும்.

இன்று மக்களின் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இக்காலத்தில் வாழ்க்கைச் செலவு குறைந்துள்ளதா? வருமானம் அதிகரிக்காமல் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன.

இந்நாட்டிலுள்ள யாரின் வருமானமாவது இவ்வாறு உயர்ந்ததா? நமது இராணுவப் படையினரின் யுத்த நடவடிக்கை காரணமாக அரசதுறையினரின் சம்பளத்தை உயர்த்த முடியாது என்றார்கள்.

இன்று வாழ்க்கைச் செலவு பிரச்சினை தினம் தினம் அதிகரித்துச் செல்கின்றது. அதற்கு நிவாரணங்கள் வழங்க வேண்டும். ஆனால், யுத்தம் முடியும் வரை எதுவும் செய்ய முடியாது என்கின்றனர். (ஓ-6)

# சர்வகட்சிக் குழுவில் கலந்து கொள்வது பயனற்றது

## தமிழ்க் கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஊடாக விரைவில் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்று முன்வைக்கப்படும் என இலங்கை அரசாங்கம் கூறிவருகின்றபோதும் அதில் தாம் தற்பொழுது கலந்துகொள்வது பயனற்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லையெனத் தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், அவ்வாறு இறுதி நேரத்தில் அழைப்பு விடுக்கப்பட்டுக் கலந்து கொண்டாலும் அதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லையெனக் கூறினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஆரம்பிக் கப்பட்ட போது அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகக் கணக்கெடுக்கவில்லை என அவர் கொழும்பு ஊடக மொன்றிடம் தெரிவித்தார்.

99 வீதமான நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் ஏன் அவர்களுக்கு நாம் தேவைப்படுகிறோம். அவர்கள் செய்யும் வேலையில் நம்பிக்கையில்லாமல் அவர்களுடன் இணைவது சாத்தியமற்றது என்றார் சிவநாதன் கிஷோர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்புவிடுக்க விருப்பதாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அண்மையில் கூறியிருந்தமை தொடர்பாகவே நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் நோக்கங்களை வெளியிடாமல், தமிழ் மக்களின் நீண்டகால வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உணரவேண்டிய நேரம் கனிந்திருப்பதாக திஸ்ஸ விதாரண அண்மையில் தெரிவித்தார். (ச-5)

# முல்லை. மாவட்டத்திலிருந்து வைத்தியர்கள் வெளியேறியுள்ளனர்

## சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வைத்தியர்கள் வெளியேறியிருப்பதாக சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவில் தற்பொழுது காணப்படும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு வைத்தியர்களுக்கும் திணைக்கள அதிகாரிகளுக்கும் சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்தல் விடுத்திருந்தது.

இதற்கமைய புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலிருந்தும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தும் வைத்தியர்கள் பலர் ஏற்கனவே வவுனியாவுக்கு வந்துவிட்டதாக சுகாதார சேவை கள் திணைக்களத்தின் பணிப் பாளர் வைத்தியர் அஜித் மெண்டிஸ் கூறினார்.

மோதல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதால் அங்கிருந்து வெளியேறுவதே சிறந்த வழி என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வன்னியிலிருந்து மேலும் 400 பேரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் திருகோணமலைக்கு அழைத்துச் சென்றுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் இவர்கள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டனர்.

புதுமத்தாளன் பகுதியிலிருந்து காலை புறப்பட்ட கப்பல் நேற்றுமுன்தினம் மாலை திருகோணமலையைச் சென்றடைந்ததுடன் நோயளர்கள் திருகோணமலை வைத்தியசலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். கடந்த செவ்வாய்க்கிழமையும் முல்லைத்தீவிலிருந்து 240 நோயாளர்கள் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டி ருந்தனர்.

கடந்த புதன்கிழமை திருகோணமலை வைத்தியசாலையில் 120 பேருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொள்



அனுபவ வாழ்க்கை, இலட்சியத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாம் தத்துவம் பேசினாலும், தினசரி வாழ்க்கையின் கடினமான வாழ்க்கை முழுவதையும் ஊடுருவி நிற்பது இலட்சியமே. இலட்சியத்தின் ஒளிக்கதிர்கள் வெளிப்பட்டு, ஒவ்வொரு சிறுதுளை மூலமும் காற்றுத் துவாரம் மூலமும் நேராகவோ, வளைந்தோ, அலை போலவோ பாய்ந்து கொண்டிருக்கின்றன. தெரிந்தோ தெரியாமலோ, நாம் ஒவ்வொரு செயலையும் அந்த ஒளியில் தான் செய்தாக வேண்டும். ஒவ்வொரு பொருளும் அதனால் தான் அழகாகவோ விகாரமாகவோ மாறுகிறது. நாம் எவ்வாறு இருக்கிறோமோ, இனி எவ்வாறு ஆகப்போகிறோமோ அதை அந்த இலட்சியம் தான் நிர்ணயிக்கிறது. இலட்சியத்தின் ஆற்றல் நம்மை ஒரு போர்வை போல் மூடிக் கொண்டிருக்கிறது. நம் இன்பங்களிலும் துன்பங்களிலும் நாம் செய்யும் உயர்ந்த செயல்களிலும் தாழ்ந்த செயல்களிலும் நமது புண்ணியச் செயல்களிலும் பாவச் செயல்களிலும் நாம் அதன் ஆற்றலை அனுபவித்து வருகிறோம்.

# இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசின் ஆறுதல் ஆதரவாக மாற வேண்டும்

## பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் வேண்டுகோள்



(சென்னை)

**இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு அறிவித்துள்ளது. ஆறுதலான நிலைப்பாடாக அமைந்துள்ளது. இந்த ஆறுதல் ஆதரவு நிலைப்பாடாக மாற வேண்டும் என்று பாமக நிறுவுனர் இராமதாஸ் கூறியுள்ளார்.**

**இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,**

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வுகாண வேண்டும் என்றும், அதற்கு முதலில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்திய நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் உரையின் வாயிலாக இந்திய பேரரசு அறிவித்திருக்கிறது.

இலங்கையில், தமிழினப் படுகொலைக்கு காரணமான போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அதற்கு இந்திய பேரரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழகத்தில் அனைத்து தரப்பினரும் கொந்தளித்துக் குரல் எழுப்பி வருகின்றார்கள்.

அதற்கு இப்போது ஓரளவு பலன் கிடைத்திருக்கிறது.

போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு விடுதலைப்புலிகளும், இலங்கை அரசும் பேச்சு வார்த்தையின் மூலம் அனைத்து தரப்பு மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்று இந்தியா அறிவித்திருப்பதும் ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

இந்த ஆறுதலான நிலைப்பாடு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு நிலைப்பாடாக மாற வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கு இலங்கை அரசு உடனடியாக செவிசாய்க்காவிட்டால், அடுத்த கட்டமாக இலங்கையில் உள்ள அனைத்து தொழில் நுட்ப உதவியாளர்களையும் இந்தியா உடனடியாக திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்.


போரை ஊக்கப்படுத்தும் வகையில் எந்த உதவிகளையும் அளிக்க மாட்டோம் என்று எச்சரிப்பதுடன், இதுவரையில் அத்தகைய உதவிகளை அளித்து வந்திருந்தால் அவற்றையும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் வகையில் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை பன்னாட்டு சேவை நிறுவனங்கள் மூலம் வழங்கவும் இந்தியா முன்வரவேண்டும்.

இத்தகைய ஆதரவு நடவடிக்கைகளின் மூலம் இலங்கை அரசை பணிய வைக்க முடியும். எனவே, அடுத்த கட்டமாக இத்தகைய நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார். (ஓ-6)

# தமிழக அரசியல்வாதிகளின் மனப்போக்கு மாறினால் தான் ஈழத்தமிழருக்கு விடியல் ஏற்படும்

## திராவிடர் கழகத் தலைவர் வீரமணி



(சென்னை)

எரியும் வீட்டில் பிடுங்கும் வரை இலாபம் என்று நினைக்கும் போக்கு தமிழக அரசியல் வாதிகளிடமிருந்து மாறிட வேண்டும்.

அன்று தான் விடிவு, விடியல் எல்லாம் ஈழத் தமிழருக்கு ஏற்படும் என்று திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், வேறு எந்தப் பிரச்சினையும் தி.மு.க.வுக்கு எதிராக எடுபடாத நிலையில், அப்பாவி இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் தி.மு.க ஆட்சிக்கு எதிராக உணர்ச்சிக் கொந்தளிப்பான இப்பிரச்சினையை விசிறி விட்டு குளிர் காயத்தானே திட்டம்?

அதிலும் இரண்டே மாதங்களில் பாராளுமன்றத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், கூட்டணி அரசியல் மும்முரமாக நடைபெறும் நிலையில் இந்த ஆயுதம் தி.மு.க ஆட்சிக்கு எதிராக கிடைக்காதா என்பதுதானே இங்குள்ள பிரதான எதிர்க் கட்சிக்கும், அதன் சுற்றுக் கோள்களுக்கும், அதனுடன் கூட்டுச் சேர இரகசிய பேரங்கள் நடத்திக் கொண்டிருக்கும் புதிய கோள்களுக்கும் உள்ள நப்பாசை?

இரண்டு அணியாக ஆக்குவதற்கு யார் காரணம் என்பதை உலகம் அறியும் என்றாலும், முதல்வர் கருணாநிதி கூறிய கத்திரிக் கோலின் இருமுனைகள் நினைவூட்டிடும் பண்பையாவது மற்றவர்கள் பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

பாரதச் செய்திகள்

## இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி

# புதுச்சேரி பாரதியார் பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேர் சாகும் வரை உண்ணா விரதம்



இலங்கையில் போரை நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி புதுச்சேரி பாரதியார் பல்கலைக்கூட மாணவர்கள் 9 பேர்கடந்த புதன்கிழமை முதல் சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக போராட்டம் நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக நேற்று முன்தினம் காலை திரைப்பட இயக்குனர் சீமான் புதுச்சேரி வந்தார். அப்போது அவர் பேசியதாவது, கடந்த 60 ஆண்டுகளாக இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். எல்லா நாடுகளிலும் மண்வாசனை வீசும். ஆனால் இலங்கையில் பிண வாசனை வீசுகிறது. ஒரு நாடே சுடுகாடாக மாறியுள்ளது. லண்டனில் சீக்கியருக்கு அவமதிப்பு நேர்ந்தால் பிரதமர் மன் மோகன் சிங் துடிக்கிறார்.

அரபு நாட்டில் மலையாளிகளுக்கு பிரச்சினை என்றால் கேரள மக்கள் துடிக்கின்றனர். மத்திய அரசின் அங்கம் வகிக்கும் கேரள அமைச்சர்கள் உடனடியாக நடவடிக்கையில் இறக்குகின்றனர். ஆனால் இலங்கையில் தமிழர்கள் கும்பல் கும்பலாக கொல்லப்படுகின்றனர். இதற்கு இந்திய அரசு கண்டும் காணாமல் துணை நிற்கிறது.

இதனை வன்மையாக கண்டிக்க வேண்டும். சாவை மதிக்காத இடத்தில் சாகத் துணியும் போராட்டத்தில் இறங்கியிருக்கும் உங்களை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். இவ்வாறு இயக்குநர் சீமான் பேசினார். (ஓ-6)

# இலங்கை தமிழர்களுக்காக கடலில் நீந்தி போராட்டம்



(நாகப்பட்டினம்)

இலங்கை தமிழர்களுக்காக முதியவர் ஒருவர் ஒரு மணி நேரம் கடலில் மிதந்து போராட்டம் நடத்தினார்.

இராமநாதபுரம் அடுத்த ஏர்வாடியைச் சேர்ந்தவர் முகமது இப்ராகிம்(61), தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட 14 மாநிலங்களில் பயங்கரவாத எதிர்ப்பு, உலக சமாதானம் போன்ற பல்வேறு மக்கள் பிரச்சினைகளை வலியுறுத்தி, ஆங்காங்கே உள்ள நதிகள், கடலில் பல மணி நேரம் தேசியக் கொடியை கையில் ஏந்தி மிதந்து போராட்டம் நடத்தியுள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்தி, அப்பாவித் தமிழர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, நாகை புதிய கடற்கரையில் தேசியக் கொடியுடன் ஒரு மணி நேரம் கடலில் மிதந்தார்.

இதையறிந்த மக்கள் ஏராளமானோர் வேடிக்கை பார்த்துச் சென்றனர். (ஓ-6)

# ஈழத்தில் அரசியல் தீர்வை கொண்டுவர இந்திய அரசு விரைந்து செயற்பட வேண்டும்

## தொல் திருமாவளவன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் போரை நிறுத்தவும், பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுகுறித்து, வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில், போரை நிறுத்தவோ, மனித உரிமைகளை மதிக்கவோ தாம் தயாராகவில்லை என்பதை இலங்கை அரசு வெளிப்படையாக அறிவித்துவிட்டது. மக்களின் இன்றியமையாத தேவைகளான உணவு, குடிநீர்,மருந்து போன்றவை தடுக்கப்பட்டுள்ளன.

மனித நேயமற்ற இந்த இனவெறியாட்டத்தை நடத்தி வரும் இலங்கை அரசைப் பணிய வைக்கும் பொறுப்பும், கடமையும் அதற்குரிய வலிமையும் இந்திய அரசுக்கே உண்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை 'ஒன்றிணைந்த தமிழர் பகுதி' என அறிவிப்பதற்கும் போரை நிறுத்தவும் பேச்சுவார்த்தை நடத்தவும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய இந்திய அரசு முன்வரவேண்டும்.

செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச ஊடகங்கள் ஆகியவற்றை போர்ப் பகுதிக்குள் அனுமதிக்காமல் கொடூர மனித அவலத்தை இலங்கை அரசு நிறைவேற்றி வருகிறது. ஈழத்தில் அமைதிச் சூழலையும், அரசியல் தீர்வையும் கொண்டு வர இந்திய அரசு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில்,வரும் 17 ஆம் திகதி நடை பெறவுள்ள மனித சங்கிலி அறப் போரில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ-6)

# கன்னியாகுமரி கடலில் மர்ம கப்பல் மிதப்பு

## பொலிஸார் விசாரணை



கன்னியாகுமரி கடலில் கடந்த புதனன்று மதியம் மர்மமான முறையில் பயணித்த பெரிய கப்பல் ஒன்றினால் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் தென்கோடி முனையில் முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள்.

இந்த நிலையில் கன்னியாகுமரி கடலில் புதனன்று பகல் 12 மணிக்கு மர்மமான முறையில் பெரிய கப்பல் ஒன்று பயணித்துக் கொண்டிருந்தது. திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் மண்டபம் ஆகிவற்றின் பின் பகுதியில் சுமார் 30 நாட்டிக் கல் கடல் மைல்களுக்கு அப்பால் அந்தக் கப்பல் சென்றது அதில் 100 அடி உயரத்தில் 3 பெரிய தூண்கள் காணப்பட்டன. அந்த 3தூண்களும் கடற்கரை யில் இருந்து பார்த்தபோது 3 திருவள்ளுவர் சிலைகள் போல் தோன்றியது. வித்தியாசமான தோற்றத்தில் காணப்பட்ட இந்த மர்மக் கப்பலை சுற்றுலாப் பயணிகள் புகைப்படம் பிடித்தனர்.

அது எந்தநாட்டுக்கப்பல்? எதற்காக கன்னியாகுமரிக்கு வந்தது? என்று உளவுத் துறைப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (ஓ-6)

# மோசமான ஆட்ட நிலையால்தான் தலைவர் பதவியிலிருந்து விலகினேன்



அணித்தலைவர் பொறுப்பிலிருந்து விலகியதற்கு மோசமான ஆட்டநிலைதான் முக்கிய காரணம் என மஹேல ஜெயவர்த் தனா விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ஒரு கிரிக்கெட் வீரராக என் எதிர்காலத்தை தீர்மானித்து தான், இராஜினாமா முடிபை கையில் எடுத்தேன். கடந்த 3 மாதங்களாக ஒரு நாள் போட்டிகளில் எனது செயற்பாடு திருப்திகரமாக இல்லை. எனது ஆட்டநிலையை மீட்க அணித்

## மஹேல விளக்கம்

தலைவர் பொறுப்பிலிருந்து விலகுவது தான் சரி என தீர்மானித்துள்ளேன். ஒரு துடுப்பாட்ட வீரராக சிறப்பான ஆட்டத்தை இனி தொடர முடிபு செய்துள்ளேன் என்றார். ஜெயவர்த் தனா கடைசியாக விளையாடிய 17 ஒரு நாள் போட்டிகளில் ஒரு அரைச் சதம் மட்டுமே கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சங்கக்கார அணித்தலைவர்**

புதிய அணித் தலைவராக சங்கக்கார நியமிக்கப்படலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் சங்கக்கார கூறுகையில், அணியின் துணைத்தலைவர், அடுத்து அணித் தலைவராக பொறுப்பேற்றாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அணித்தலைவர் பொறுப்பு என்பது சரியான நபரை சரியான நேரத்தில் தேர்வு செய்வது. அதற்கான தகுதி என்னிடத்தில் உள்ளதா என தெரியவில்லை. கிரிக்கெட் சபையின் முடிபே இறுதியானது என்றார்.

# தென்னாபிரிக்க டெஸ்ட் அணியில் துணைத் தலைவருக்கு இடமில்லை

அவுஸ்திரேலியாவுடனான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்குமான தென்னாபிரிக்க அணியில் இருந்து உபதலைவர் ஆஷ்வல் பிரின்ஸ் நீக்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலிய அணி மூன்று டெஸ்ட், இரண்டு இருபது-20 மற்றும் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடவுள்ளது.

இதில் இருநாடுகளுக்கும் இடையிலான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்குமான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக காயத்தினால் அவதிப்பட்டு வரும் தென்னாபிரிக்க அணியின் உப தலைவர் ஆஷ்வல் பிரின்ஸ் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளுக்குமான அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தென்னாபிரிக்க தேர்வுக் குழு உறுப்பினர் மார்க் புரெக்டர் கூறியதாவது, பிரின்ஸ் நீக்கம் கடினமான முடிபாகும். எங்கள் அணியில் 6 துடுப்பாட்ட வீரர்களின் இடத்துக்கு உலகத் தரம்வாய்ந்த 7 துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். எனவேதான் பிரின்ஸுக்கு இடம் கிடைக்கவில்லை என்றார்.

இதன்படி அவுஸ்திரேலியாவுடனான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கும் அவுஸ்திரேலிய மண்ணில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய அதே 11 வீரர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். அணியின் 12 ஆவது வீரராக இடதுகை மித வேகப்பந்து வீச்சாளர் லொன்வபோ சொட்சோப் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி முதல் மார்ச் 02ஆம் திகதிவரை பொட்செப்ஸ்ரூமில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இரண்டாவது போட்டி மார்ச் 6 ஆம் திகதி டர்பனில் ஆரம்பமாகிறது. இந்த டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றால் அது டெஸ்ட் தரவரிசையில் அவுஸ்திரேலியாவை பின்தள்ளி முதலிடத்துக்கு முன்னேறிவிடும்.

அணி விபரம்; கிராம் சிமித் (தலைவர்), ஹாசிம் அம்லா, மார்க் பௌச்சர், (வி.கா.), ஏ.பி.டி வில்லியர்ஸ், ஜே.பி.டுமினி, போல் ஹரிஸ், ஜக் கலிஸ், நீல் மக்கன்ஸி, மோர்னி மோர்கல், மகாயா நிற்னி, டெல் ஸ்டைன், லொன்வபோ சொட்சோப். (5)

# மழையால் ஐந்தாவது போட்டி கைவிடப்பட ஆஸி.-நியூசிலாந்து தொடர் சமனிலையானது

(அவுஸ்திரேலியா)

அவுஸ்திரேலிய-நியூசிலாந்து அணிகளுக்கும் இடையிலான தீர்க்கமான இறுதிப் போட்டி மழை காரணமாக முடிவின்றி கைவிடப்பட்டது.

இதன் மூலம் சப்பல்-ஹாட்லி கிண்ணத்திற்கான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 2:2 என்று சமனிலையானது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 5 ஒருநாள் ஒரே ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் நடந்து முடிந்த 4 ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று தொடர் 2:2 என்ற கணக்கில் சமனிலையிலிருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான தீர்க்கமான ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நேற்று பிரிஸ்பேனில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இப் போட்டி ஆரம்பமாகவிருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் தாமதமானது. இதனால் இரவு வரை காணப்பட்ட சீரற்றகால நிலையினால் ஆட்டம் தாமதமாக ஆரம்பமானதால் போட்டி இரு அணிகளுக்கும் தலா 22 ஓவர்கள் கொண்டதாக நடைபெற்றது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 22 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 168 ஓட்டங்களை குவித்தது.

இதில் ஹடின் 65 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 88 ஓட்டங்களையும் பெர்ஹுயூசன் 35 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 55 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் மில்ஸ் 2 விக்கெட்டுக்களையும் ஓ பிறின், விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் தாமத மானதால் மீண்டும் 2 ஓவர்கள் குறைக்கப்பட்ட நிலையில் பதிலுக்கு 20 ஓவர்களில் 156 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பொடுத்தாடிய நியூசிலாந்து அணி 14 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை யிழந்து 123 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்ட நேரம் முடிபடைந்ததால் போட்டி முடிபின்றி கைவிடப்பட்டது.

இதில் குப்தில் 34 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 64 ஓட்டங்களையும் டைமன்ரி 22 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 26 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரக்கன் 2 விக்கெட்டுக்களையும் ஹில்பென்ஹயூஸ், ஜோன்ஸன் மற்றும் சிடில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டி முடிபின்றி கைவிடப்பட்டதால் சப்பல்-ஹாட்லி கிண்ணத்தை அவுஸ்திரேலிய-நியூசிலாந்து அணிகள் பகிர்ந்து கொண்டது.

இத் தொடரில் பிரகாசித்த அவுஸ்திரேலிய அணியின் மைக்கெல் ஹசி தொடரின் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

# இருபது-20 வேண்டாம் டெண்டுல்கர் வெறுப்பு

(மும்பை)


இருபது -20 போட்டிகளில் விளையாடுவதில்லை என்னும் தனது முடிபில் மாற்றமில்லை என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இருபது -20 போட்டிகள் மிகவும் பிரபலமாகி வந்தாலும் இருபது -20 போட்டிக்கான இந்திய அணியில் தான் இடம் பெறப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு இங்கிலாந்துத் தொடருக்குப் பின்னர் இருபது -20 போட்டியில் ஆடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளதாகவும் அந்தமுடிபில் எந்த மாற்றமும் இல்லை என்று அவர்கூறியுள்ளார். மும்மை இந்தியன்ஸ் அணியில் ஆரம்பத்தில் இருந்தேஇடம்பெறுவதால் ஐ.பி.எல் போட்டிகளில் மட்டுமே விளையாடுவேன் என்று அவர் கூறியுள்ளார். (5)

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 07





**திருப்புமுனை தந்த நியூசிலாந்து, இங்கிலாந்து தொடர்கள்**

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர்நிறைவடைய 1992ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் நியூசிலாந்து அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதலாவது டெஸ்டில் முரளிதரனுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதுடன் அப்போட்டி சமனிலையில் முடிபடைந்தது.

எனினும் 1992ஆம் ஆண்டு டிசம்பர் கொழும்பு சிங்கள விளையாட்டு கழக மைதானத்தில் டிசம்பர்6-9ஆம் திகதி வரை நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் முரளிதரன் இணைக்கப்பட்டார். இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 394 ஓட்டங்களை எடுத்தது.

இதில் துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களை எடுத்த முரளிதரன் டெஸ்ட் அரங்கில் தனது ஓட்டங்கள் கணக்கை ஆரம்பித்தார். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய நியூசிலாந்து அணி வர்ணவீர-முரளி ஜோடியின் சுழலிற்கு ஈடுகொடுக்க முடியாமல் 102 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் முரளிதரன் 12.1 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்ட மற்ற ஓவர்கள் அடங்கலாக 22 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களை சாய்த்தார். இதில் நியூசிலாந்து அணித் தலைவர் குரோவ் ஓட்டமெதனையும் எடுக்காமல் முரளிதரனின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தமை விஷேட அம்சமாகும்.

இதன்மூலம் பொலோன் நிலைக்கு தள்ளப்பட்ட நியூ

**பாலா**

சிலாந்து அணி தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 361 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 40 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 134 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை சாய்த்து அசத்தினார். இரண்டாவது இன்னிங்ஸிலும் 107 ஓட்டங்களை எடுத்த நியூசிலாந்து அணித்தலைவர் குரோவ் முரளிதரனின் பந்துவீச்சில் திலகரட்ணவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 70 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 73 ஓட்டங்களை எடுத்து இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் தொடரையும் 1:0 என்ற கணக்கில் இலங்கை அணி கைபற்றியது இப்போட்டியில் இரு இன்னிங்ஸிலுமாக முரளிதரன் 7 விக்கெட்டுக்களை வீழ்த்திச்சாதித்தார். (பயணிக்கும்)

# எண் விளையாட்டு- 12

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 19\ | 28\ | 4\ | 17\ | | 21\ | 3\ | 23\ | 30\ |
| \24 | | | | | \24 | | | | |
| \27 | | | | | 15\26 | | | | |
| \5 | | | 14\9 | | | | 24\7 | | |
| \16 | | | | 25\34 | | | | | |
| | 15\ | 11\16 | | | 12\8 | | | 29\ | 13\ |
| \20 | | | | | 8\23 | | | | |
| \13 | | | 17\6 | | | | 14\6 | | |
| \14 | | | | | \26 | | | | |
| \22 | | | | | \16 | | | | |

***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

*நேற்றைய பகுதிக்கான விடை*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | 5 | 9 | | | 4 | 7 | 9 | 8 | |
| | 2 | 8 | | 8 | 1 | 2 | 6 | 3 | 9 |
| | 1 | 2 | 4 | 5 | | | | 1 | 6 |
| | | | 8 | 9 | 7 | | 5 | 9 | 8 |
| | | 4 | 9 | 7 | 1 | 8 | 3 | 5 | |
| | 1 | 2 | 3 | | 2 | 6 | 1 | | |
| | 4 | 9 | | | | 7 | 2 | 3 | 1 |
| | 2 | 3 | 7 | 4 | 1 | 9 | | 1 | 2 |
| | | 6 | 9 | 8 | 3 | | | 9 | 8 |

# புதிய பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல் 27 பேர் உயிரிழப்பு; 116 பேர் படுகாயம்

புதிய மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் பகுதிகள் மீதும் மற்றும் பிற பகுதிகள் மீதும் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 27 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 116 பேர்காயமடைந்துள்ளனர் என நேற்றிரவு இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்த புதிய மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால் மீது நேற்று செறிவான எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அம்பலவன்பொக்கணை மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகள் மீது நேற்று வெள்ளிக்கிழமை மாலை தொடக்கம் 60க்கும் அதிகமான ஆட்டிலறி எறிகணைகளை செறிவாக வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் 7 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 45 பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைப்பாலையில் இடம்யெர்ந்து கொண்டிருந்த மக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

பிரதான வீதியில் நேற்று இரவு 7.50 மணியளவில் நடத்தப்பட்ட இந்த எறிகணைத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 34 பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது நேற்றுக் காலை 10 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 34 பேர் காயமடைந்துள்ளனர்.

க.பார்த்தீபன் (வயது 15), கண்ணன் (வயது 18), தர்மராஜா (வயது 51), சி.சதீஸ் (வயது 34), அ.கிறிஸ்டி குமுதா ஆகியோர் உயிரிழந்தவர்கள் ஆவர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மீது எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. வீதியில் சென்று கொண்டிருந்த சுமையூர்தி மீது எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் அதில் சென்று கொண்டிருந்த ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர் சிவகுமார் சசிக்குமார் (வயது 33) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச)

## வவுனியாவில் இருந்து 27 பேர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதி

(வவுனியா)

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்று வரும் மோதல் சம்பவங்களில் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 27 பேர் நேற்று முன்தினம் மன்னார் வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களுள் சிறுவர்களும் அடங்குகின்றனர். இதுவரையில் வவுனியா வைத்தியசாலையில் இருந்து மன்னார் பொது வைத்தியசாலைக்கு 147 பேர் சிகிச்சைகளுக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தமிழ் இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை பிரதேச ஒருமுறைச்சோலை பகுதியில் இனம் தெரியாத ஆயுததாரிகளால் இளம் கூலித் தொழிலாளி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது வந்தாறுமூலை பிரதேச ஒருமுறைச்சோலை பகுதியில் அமைந்துள்ள அவரின் வீட்டுக்கு சென்ற அடையாளம் தெரியாத ஆயுததாரிகள்28 வயதுடைய யோகராஜா ரஜினிகாந் என்ற இளம் குடும்பஸ்தரை அழைத்துச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இவர் பானைவனையும் தொழில் செய்பவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மெய்வல்லுநர் போட்டி

(அனலைதீவு)

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தீவக கல்வி வலயக் முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், கௌரவ விருந்தினர்களாக அனலைதீவு ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி சு.மனோன்மணி, அனலைதீவு வடலூர் அ.த.க வித்தியாலய அதிபர் திருமதி ஜி.கேதீஸ்வரநாதன், அனலைதீவு தெற்கு அ.த.க வித்தியாலய அதிபர் செல்வி எஸ்.விக்னேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)

## ஊடகவியலாளர் சத்தியமூர்த்தி எறிகணைத் தாக்குதலில் உயிரிழப்பு

(கொழும்பு)



அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி மரணமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தேவிபுரத்தில் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்.மண்டைதீவைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் பொலநறுவையில் இருக்கும் தமிழ்க் கிராமமான மன்னம்பிட்டியில் பிறந்து பின்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து தனது பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்ந்தார்.

ஊடகத்துறையில் 1990களில் ஈடுபடத் தொடங்கிய இவர், ஈழநாதத்தில் படைத்துறை பத்தியை எழுதி வந்ததுடன் ஈழநாட்டிலும் ஊடகவியலாளராகச் செயற்பட்டு அரசியல் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-1)

## மாணவர்கள் கௌரவிப்பு

(திருநெல்வேலி)

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு -2009 எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ.பாலகுமார் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (ச-14,136)

## செஞ்சிலுவைச் சங்கமும்...

வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

பொதுமக்களின் பாதுகாப்புக்கே அரசாங்கம் முன்னுரிமை கொடுத்திருப்பதுடன், நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களையும் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர், செஞ்சிலுவைச் சங்கத்தலைவருக்குக் கூறியுள்ளார்.

மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்னெடுத்துவரும் பணிகளைப் பாராட்டிப் பேசிய அமைச்சர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வட பகுதியிலுள்ள இராணுவத்தினர், அரசாங்க அதிபர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுடன் புரிந்துணர்வுடன் செயற்பட்டுவருவதாகக் கூறினார்.

பொதுமக்களுக்குத் தேவையான உடனடி உதவிகள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு வழங்கப்படவேண்டிய உதவிகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடியதாக வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோதல்கள் நடைபெற்றுவரும் பகுதிகளில் சிக்குண்டிருக்கும் பொதுமக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் எடுத்துக் கூறியதுடன் மக்களைப் பாதுகாப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும் என கூறியதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் கூறி கொழும்பில் உள்ள அலுவலத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட பின்னர் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பிரித்தானிய...

இலங்கையின் தன்னாட்சி அதிகாரத்திற்கு உள்ள கௌரவத்திற்கு இத்தகைய முயற்சி கேடு விளைவிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் இந்த நடவடிக்கை குறித்து அமைச்சரவைக்கு வெளிவிவகார அமைச்சர் தெரியப்படுத்தியுள்ளார். அதனை தொடர்ந்து அது பற்றி ஆராய்ந்த அமைச்சரவை பிரித்தானியாவின் இந்த நியமனத்தை நிராகரிப்பதற்கு தீர்மானித்தது. இந்த நியமனமானது இலங்கையின் இறைமையில் தலையிடும் விடயம் என அமைச்சரவை சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சரவையின் இந்த தீர்மானத்தை வெளிவிவகார அமைச்சு அறிக்கை மூலம் பிரித்தானியாவுக்கு அறிவித்திருப்பதாக தெரியவருகிறது. இலங்கை அரசின் நிராகரிப்பு தொடர்பாக பிரித்தானிய அரசு கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. (ச-3,5,14)

## முல்லைத்தீவிலிரு...

அண்மைய பகுதிகளிலிருந்து வரும் மக்களை மன்னாருக்கும் அனுப்பிவைக்குமாறும் ஆயர்கேட்டுள்ளார்.

வன்னியிலுள்ள மக்களின் பெரும்பாலான உறவினர்கள் யாழ்ப்பாணத்திலேயே உள்ளதால் அங்கிருந்து வருபவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதே சிறந்தது எனவும் ஆயர் கூறியுள்ளார்.

வன்னியிலிருந்து வரும் மக்களை தென்மராட்சி, மிருசுவில், பளை போன்ற இடங்களில் குடியமர்த்துவதால் அவர்கள் நன்மையடைவர் எனவும் ஆயர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயரின் இக்கடிதம், பஸில் எம்.பி, அனர்த்த புனர்வாழ்வு அமைச்சர், பாதுகாப்பு செயலர் கோத்தபாய, வவுனியா மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

## பயணிகள்...

கப்பல் சேவையில் தங்கள் பிரயாணத்தினை மேற்கொள்ள முடியுமென அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## புதுக்குடியிருப்பு நகருக்குள்...

பாதுகாப்புக்கான ஊடக நிலையம் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளின் பிரதான நகராக விளங்கும் புதுக்குடியிருப்புக்குள் பிரவேசித்துள்ள படையினர் அப்பகுதியை முழுமையாக கைப்பற்றுவதற்கான இராணுவ முன்னெடுப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் குருவில்குளம், அம்பன்குளம், குப்பாலான்குளம், புதுக்குடியிருப்பு தெற்கு மற்றும் புதுக்குடியிருப்பு மேற்கு போன்ற பகுதிகளிலும் இரு தரப்புக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் எறிகணை மற்றும் சிறு ஆயுதங்களிலான தாக்குதல்களில் படைத் தரப்புக்கு சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆயினும் அத்தாக்குதல்கள் படையினரின் பதில் தாக்குதல்களின்போது முறியடிக்கப்பட்டுள்ளதுடன் அம்முறியடிப்புத் தாக்குதல்களில் புலிகள் தரப்புக்கு பெருமளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. மோதல்களை அடுத்து அப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது புலி உறுப்பினர்களின் சடலங்கள் உட்பட ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## ஐ.நா. சபைக்கு முன்னால்...

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இளைஞரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும் இளைஞர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துவிட்டார்.

லண்டனில் இருந்து வந்த இந்த இளைஞரின் பெயர் முருகதாசன் எனவும் இவருக்கு 27 வயது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் 5 பக்கங்களுக்கு தாயகப் பிரச்சினை தொடர்பாக ஒரு மரண சாசனம் எழுதி வைத்து தீக்குளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முருகதாசன் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட ஐ.நா. அலுவலகம் முன்பாக உள்ள இடத்தில் சுவிஸ்வாழ் தமிழர்கள் கூடி மெழுகுவர்த்தி ஏற்றி தமது அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தபோதும் அவ்விடம் சோகத்தில் மூழ்கிப் போய் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் தான் எழுதி வைத்த கடிதத்தில், ஈழத்திலே மேற்கொள்ளப்பட்டுவருகின்ற தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு தன்னால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்ற நிலையிலேயே தன் உயிரை மாய்த்துக் கொள்வதாக எழுதியுள்ளார்.

அவ்விளைஞன் தனது பெயரையும் தான் இங்கிலாந்தில் இருந்து வந்துள்ளேன் என்ற தகவலையும் மட்டுமே குறிப்பிட்டிருப்பதால் இவர் தொடர்பான தகவல்களைப் பெறவும் இவரது உறவினர்களை அறியவும் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5,14)

## 6 ஆயிரம் பீரங்கி...

வன்னியில் உள்ள தேவிபுரம், வள்ளிபுனம் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்று முன்தினம் படையினர் நடத்திய அகோரமான பீரங்கித் தாக்குதலில் 132 பேர் படுகொலை செய்யப்பட்டு 358 பேர் காயமடைந்துள்ளனர்.

அப்பகுதிகள் மீது நேற்று முன்தினம் தொடக்கம் செறிவான ஆட்லெறி எறிகணை, பல்குழல் வெடிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முழுநாளும் அதிகாலை தொடக்கம் மாலை வரை 6ஆயிரம் எறிகணைகள் வரை இந்தப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததாக பிரதேச தகவல்களை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காயமடைந்தவர்களில் 91பேர் மாத்தளன் மருத்துவமனைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் 10 பேர் மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகையிலேயே உயிரிழந்துவிட்டனர்.

காயமடைந்த ஏனையவர்களின் நிலைமையும் ஆபத்தான கட்டத்திலேயே உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-1)


## விநியோகஸ்தர்கள் தேவை

பத்திரிகை விநியோகத்திற்கு ஆட்கள் தேவை, உரிய ஆவணங்களுடன் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்.

*குறிப்பு:- வலம்புரி அலுவலகத்திற்கு 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களும் இரவில் தங்குவதற்கு வசதியுடையவர்களும் மட்டும் நேரில் வரவும்.*

-நிர்வாகம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.